பக்கங்கள் 8. பத்திரிகையாகப் பதிவு செய்யப்பட்டிருக்கிறது. தனிப்பிரதி விலை சதம் 6.

# இலங்கை இந்தியன்

இலங்கை இந்தியரின் நலவுரிமைகளுக்காக உழைத்துவரும் ஓர் சிறந்த தமிழ் வாரப்பத்திரிகை

புதன் கிழமை தோறும் வெளி வருவது

## THE CEYLON INDIAN

A WEEKLY JOURNAL WHICH CHAMPIONS THE CAUSE OF INDIANS IN CEYLON

Pubished Every Wednesday

"எனது கடன் பணி செய்து கிடப்பதே" "சாதி மதங்களைப் பாரோம்" "நாமார்க்கும் குடியல்லோம்"

மலர் 1. | 1928-ம் வருஷம், டிசம்பர் மீ 5 உ புதன்கிழமை. | இதழ் 26.

## அபாயக் குறி.

(ஓர் சிறு கதை.)

ப. ராமஸ்வாமி.

[இது ஒரு ருஷியக்கதையை ஆதாரமாக வைத்து எழுதப்பட்டிருக்கிறது. தொழிலாளர் இயக்கங்கள் பெருகிவளரும் இக்காலத்தில் எக்காரணத்தையொட்டியும் யாரும் அன்பைக் கைவிடக் காரணமில்லையென்பதையும், தியாகத்தின் பெருமையையும் வற்புறுத்தும் இதைப்போன்ற கதைகள் மிகவும் பயன்படுமென்று நம்புகிறோம். ப--ர்]

ஞானப்பிரகாசம் வெகுகாலம் பட்டாளத்தில் சேவகவேலை செய்து வந்திருக்கிறான். எத்தகைய கோரமான யுத்தம் நடந்த காலத்திலும் அவன் எதற்கும் அஞ்சாது யுத்தவீரர்களுக்கு உணவுப் பொருள்கள் கொண்டுபோய்க் கொடுப்பது வழக்கம். குண்டுமழை பொழிந்தாலும் அவன் அஞ்சுவதில்லை. அது அவனுக்கு வழக்கமான காட்சியாய்ப் போய்விட்டது. ஆயினும் வயது ஐம்பதுக்கு மேலாய் விட்டதால் அவனுக்கு யுத்தகளத்தில் வேலைசெய்யக்கூடிய பலம் போய்விட்டது. பட்டாளத்தில் அவனிடம் அன்புகொண்டிருந்த ஒரு தலைவன் அவனுக்கு வேண்டிய சிபார்சுகள் செய்து ஒரு ரெயில்வே கம்பெனியில் சொற்ப சம்பளத்தில் ஒரு வேலை அமர்த்திக் கொடுத்தான்.

புதுவயலுக்கும் சிறுகுளத்துக்கும் இடையிலுள்ள இருப்புப் பாதையில் இரண்டு 'ஸிக்னல்' வீடுகள் உண்டு. அவற்றில் ஒன்றில் நமது ஞானம் வேலைபார்த்து வந்தான். ஒவ்வொரு புகைவண்டியும் வரும்பொழுது அவன் கொடியையோ விளக்கையோ காட்டி அது போவதற்குக் குறிகாட்டவேண்டும். அதனால் பாதையில் அபாயமொன்றுமில்லையென்று வண்டி நடத்துபவர் அறிந்துகொள்வர். மற்றவீட்டில் வேறொருவன் வேலைபார்த்துவந்தான்.

ஞானத்துக்குச் சம்பளம் பதினைந்து ரூபாய். வயது காலத்தில் அவனுக்கு உதவிசெய்ய யாருமில்லை. அவனுடைய வயது சென்றமனைவி தவறிப்போய்விட்டாள். அவனுக்குக் குழந்தைகளில்லை. மனதில் தோன்றும் வருத்தத்தையோ இன்பத்தையோ பிறருடன் சேர்ந்து அனுபவிக்க வழியில்லை. வாலிபர்களுக்கு ஒரு துன்பம் நேர்ந்தால் வளர்ந்துவரும் அவர் வாழ்க்கையில் நேரும் இன்பங்கள் அத்துன்பத்தை மூடி மறைத்துவிடுகின்றன. செல்வர்களுக்கு ஒரு இன்னல் விளைந்தால் பலவிதக் கேளிக்கைகளிலும் இன்பநுகர்ச்சிகளிலும் அவர்கள் அதைமறந்துவிடுவர். ஆனால் வயதுமுதிர்ந்த ஒரு எளிய கிழவன் வாழ்வில் ஏற்பட்ட துன்பங்களையும், காயங்களையும், தோல்விகளையும் எண்ணி அல்லற்பட்டு வருந்தும்பொழுது அவனை ஆற்றுவார் யார்? ஒருவருமில்லை.

ஆனால் ஞானம் வாழ்வில் புறங்காட்டி ஓடும் பேடியல்ல. மனத்தில் எந்த விஷயமாவது துன்புறுத்திக் கொண்டிருந்தால் அவன் உடனே முழங்கால் பணியிட்டு தெய்வத்தை வணங்குவான். தொழுகைக்கு இந்தநேரமென்றில்லாது அவன் கூடுமான பொழுதெல்லாம் பிரார்த்தனை செய்வான். ரயில்வே தொழிலாளர் சங்கத்தில் அவனுக்கு உயர்ந்த ஸ்தானமொன்றும் இல்லாவிடினும் தொழிலாளர் பலர் அவனிடம் அடிக்கடி ஆலோசனை கேட்பர். யாரிடம் என்ன பேசினாலும் பிரர்மனம் நோவாமலும் பிறருக்கு இன்னல் விளையாமலும், பிறர் துன்பத்தைத் தன்னுடையதாகக் கருதியும் ஞானம் பேசுவான். இதனால் பலரும் அவனை நேசித்து வந்தனர்.

ஞானமும் அவனுக்கு அடுத்தாற்போலுள்ள 'குறிவீட்'டில் வசித்துவந்த முத்துக்குமாரும் அடிக்கடி சந்தித்துப் பேசுவது வழக்கம். முத்துக்குமாரு உயர்ந்து பருத்து வளர்ந்த முரடன். அவன் ஞானத்தைக் கண்டவுடன் தன் முரட்டுத்தன்மையை அடக்கி ஆட்டுக்குட்டியைப் போல்பணிந்துவிடுவான். ஒருநாள் மாலை இருவரும் சந்தித்த பொழுது முத்துக்குமாரு மிகுந்த கோபத்துடன் கூக்குரலிட்டான்.

"என்ன ஞானம்? கிழட்டுப்பிணம், உன்னிடம் யோசனை கேட்டால் 'பொறு, பொறு' என்றுகூறித் தடுத்துவிடுவாய். நான் படும்பாடு எனக்குத்தான் தெரியும். இந்த ரயிலில் வேலைசெய்வதைவிடத் தோட்டி வேலை மேலானது"

"முத்து! எதற்கு இவ்வளவு கோபம்? ஆத்திரமும் கோபமுமில்லாது அமர்ந்து பேசு. விஷயம் என்ன?"

"இல்லை அண்ணன், நான் இந்தவேலைக்கு வந்து இவ்வளவு நாளாய்ப்படும்கஷ்டம் உனக்குத்தெரியும். பதினைந்து ரூபாய் சம்பளம் எனக்குச் சோற்றுக்கே காணவில்லை. குடிப்பதற்கும், உடுக்கத்துணிவாங்கவும் கடன் வாங்கவேண்டும். இந்த நிலைமையில் ரயில்வே அதிகாரிகள் என்னைக் கஷ்டப்படுத்துகிறார்கள். என்னுடைய குறிவீட்டுக்குப் பின்னால் கொஞ்சம்தரிசு நிலம் கிடந்தது. அதுரயில்வே கம்பெனிக்குச் சொந்தமானது. நான் சென்ற ஆறுமாதமாய் அதில் பாடுபட்டுவந்து இப்பொழுது கொஞ்சம் படர்பயிர் போட்டிருக்கிறேன். நான் செய்தது தவறென்று எனக்கு நேற்று ஐம்பது ரூபாய் அபராதம் போட்டிருக்கிறார்கள்!"

"முத்து! உன் எளிய நிலைமை எனக்குத்தெரியாமல் இல்லை. நீ அந்த நிலத்தைப் பருவப் படுத்துவதற்குமுன் ஒரு மனுஎழுதினாலென்ன? மேலதிகாரிகள் சொல்வது நமக்குச் சட்டம். நமக்குப் பிரியமில்லாவிடில் வேலையை விட்டுவிடுவதேநலம்."

"வேலையை விடாமல் நான் பிடித்துக்கொண்டா இருக்கப்போகிறேன்? ஆனால் விடுவதற்கு முன் என்ன நடக்கப்போகிறதென்று பார்!"

"முத்து! சிறு பிள்ளைத் தனமாய்ப் பேசாதே. நமக்குத் தொழிலாளர் சங்கம் இருக்கிறது. நமது குறைகளை அதனிடம் சொல்லுவோம். சங்கம் தனிப்பட்டவர்களுக்குச் சௌகரியம் செய்துகொடுக்க ஏற்பட்டதில்லை. எனினும் முயற்சி செய்வோம். உனக்குப் பணம் வேண்டுமென்றால் நான் ஏதாவது தருகிறேன், குழந்தைகுட்டிகளுக்கு அனுப்பு. நேரமாய்விட்டது. நான் வருகிறேன்."

இவ்வாறு ஞானம் சொல்லிவிட்டு வழிநடந்தான். முத்துவுக்குக் கோபம் அடங்கவில்லை. யவரையாவது அடித்து மிதித்துத் தள்ளினாலொழிய அவன் ஆவேசம் தணியாதுபோலிருந்தது. பாவம்! என்ன செய்வான்? தரித்திரத்தின் கொடுமையை யார்தான் சகிக்கமுடியும்? நாம் உலகில் வாழ உரிமையுள்ளவர்களே. ஆனால் உரிமையுடன் செய்யவேண்டிய கடமைகளும் உண்டல்லவா? முத்துவுக்கு உலக அனுபவம் போதாது. தர்ம சிந்தனை, அன்பு எல்லாவற்றையும் அவன் தரித்திரம் அழித்துவிட்டது. எளிமை நல்லுணர்வைக் கொடுக்கும். மற்றும் திக்கற்றியான நிலையில் அது மனிதன் அறிவையும் மழுங்கச்செய்துவிடுகிறது. முத்து அறிவு மழுங்கி யாது செய்வதென்று தெரியாமல் தன் வீட்டிற்குச் சென்றுவிட்டான். இரண்டு தினங்களாக அவனுக்கு நல்ல உறக்கமில்லை. அவன் மனம் மிகுந்த குழப்பத்திலிருந்தது. ஒவ்வொரு புகைவண்டி வரும்பொழுதும் அது இரசத்தம் அவனைத் தட்டியெழுப்பும். மற்ற நேரமெல்லாம் ஆலோசனை—குழப்பம்—அழுகையாகவே கழிந்தது.

ஞானம் தனக்குத் தெரிந்த ரயில்வே அதிகாரிகளைக் கண்டு முத்துவின் விஷயத்தை எடுத்துச்சொன்னான். அவர்கள் ஒருவனுக்கென்று தனியாக ஒன்றும் செய்யமுடியாதென்று கூறிவிட்டனர். ஞானம் பின்னும் விடாமுயற்சியுடன் தொழிலாளர் சங்கத்தலைவரிடம் விண்ணப்பித்துக்கொண்டான். எளிமைப்பட்டுள்ள வேலைக்காரருக்கு அவர்கள் வீடுகளுக்குப் பின்னுள்ள சிறுநிலங்களில்பயிர்செய்துகொள்ள உத்திரவளிக்குமாறு ரயில்வே அதிகாரிகளை வேண்டிக்கொள்ளவேண்டுமென்று அவன் கூறினான். சங்கத் தலைவரும் அதற்கிசைந்து வேண்டிய முயற்சி செய்வதற்குச் சம்மதித்தார். ஞானம் ஒருவாறு மனச் சாந்திபெற்று வீடு திரும்பினான்.

ஒரு வாரத்திற்குப் பின் அவன் புதுவயல் ஸ்டேஷனுக்குப் போகவேண்டியிருந்தது. இடையில் முத்துவின் வீடிருந்தது. அவன் முத்துவைத் தேடிப்பார்த்தான்; காணவில்லை. புதுவயலுக்குச் சென்று அவன் தன் காரியத்தை முடித்துக்கொண்டு திரும்பும்பொழுது மாலை ஐந்து மணியாய்விட்டது. விரைவில் சென்று ஏழு மணி வண்டியை எதிர்பார்ப்பதற்காக அவன் அவசரமாய் நடந்துவந்தான், வரும்பொழுதும் வீட்டில் முத்துவைக் காணவில்லை. அவன் மனதில் மிகுந்த வருத்தமடைந்து ஆலோசனையின்றி எதையும் செய்துவிடாமலிருக்கவேண்டுமேயென்று எண்ணமிட்டான். அவன் தன் குறி வீட்டை நோக்கி வேகமாய் வந்துகொண்டிருக்கும்பொழுது வெகு தூரத்தில் யாரோ ஒருவன் இருப்புப் பாதையின் மேல் உட்கார்ந்திருப்பதாய்த் தெரிந்தது. அப்பொழுது சூரியன் ஒளி மறைந்துகொண்டுவந்தது. இரவுநெருங்கி வந்துகொண்டிருந்தது. ஞானம் யாரோ ரயிலில் வீழ்ந்து தற்கொலை செய்துகொள்ளப்போவதாய் எண்ணினான். துடிதுடித்துக்கொண்டு அவன் ஓடிச்சென்றான்.

ஞானம் வருவதன் காலோசை கேட்டு இருப்புப் பாதையிலிருந்த ஆள் ஓடிச்சென்றுவிட்டான். அவன் முத்துவாய்த்தான் இருக்கவேண்டுமென்று ஞானம் தீர்மானித்தான். அவன் இருப்புப் பாதைபடியிற் சென்று பார்த்தான். ஆறு அடி நீளம் இருப்புப் பாதை காணப்படவில்லை. யாரோ அதைப் பிடுங்கி எறிந்திருந்தனர். முத்து அவ்வாறு செய்யத் துணிவானென்று ஞானம் எண்ணவில்லை. ஆனால் கோப வெறியில் நன்மைதின்மை அறியாது செய்திருப்பானோ? ஒன்றுந் தெரியவில்லை. ஞானம் பிரமித்து நின்றுகொண்டிருந்தான். அச்சமயத்தில் தொலையில் ஒரு புகைவண்டி வரும் சத்தம் கேட்டது. உடனே ஞானம் இருப்புப் பாதையில் காதைவைத்துக் கேட்டான். அந்த ஓசையிலிருந்து வண்டி சமீபத்தில் நெருங்கிவருவதாய்த் தெரிந்தது.

சிறிதுநேரத்தில் அவன் திடுக்கிட்டு நின்று கண்ணீர் வடித்தான். அப்பொழுதுதான் அவனுக்கு ஒரு ஞாபகம் வந்தது. புதுவயல் திருவிழாவிற்காக ஒரு விசேஷ ரயில்வண்டி அன்று மாலை வருவதாயிருந்தது. ஆயிரக் கணக்கான ஆடவர்கள், பெண்டிர், குழந்தைகள் வயோதிகர்—செல்வர், ஏழைகள்—யாவரும் அன்று கோலாகலத்துடன் அவ்வண்டியில் வந்துகொண்டிருப்பர்! இடையில் இருப்புப் பாதை உடைந்திருந்தால் அந்த வண்டி திடீரென்று கீழே சாய்ந்துவிட்டால்—அந்தோ எத்தனை உயிர்கள் மடிந்துபோக நேரும்? இரத்த வெள்ளம் கொந்தளித்து ஓடுமன்றோ? குழந்தைகள் அழுகையும், மற்றவர் கூக்குரலும் பூமியைப் பிளந்துவிடத்தக்கதாயிருக்குமன்றோ? இந்தத் துர்ப்பாக்கிய நிலைமை ஏற்படாதவாறு எவ்வாறு தடுப்பதென்று ஞானம் பதைபதைத்து எண்ணமிட்டான். விரைவாக ஓடிச் சென்று தன் வீட்டிலிருந்து சிகப்புக்கொடியை எடுத்து வந்துவிடலாமென்று யோசித்தான். ஆனால் அதற்குள் ரயில் நெருங்கிவந்துவிட்டது. இன்னும் சிறிது நேரமானால் இருளில் கண்தெரியாது. ரயிலை

(3-ம் பக்கம் பார்க்க)

# கலம்பகம்.

பம்பாய்ப் பலிக்களம்:... பம்பாயில் குழந்தைகளுக்கும் மற்றவர்களுக்கும் போதிய பால் கிடைக்கவில்லையென்று ஓயாது கூக்குரல் கேட்கிறது. பம்பாயிலுள்ள பாலின் விலையைவிட லண்டனில் 100க்கு 75 விகிதம் குறைத்து விற்கப்படுகிறதாம். நமது நாட்டில் மக்களெல்லாம் 'பாலடையும், நறுநெய்யும், தேனுமுண்டு' வாழ்ந்ததாகச் சரித்திரம் கூறுகிறது. இந்தப் பால் பஞ்சம் எங்கிருந்து வந்திருக்கிறது? பம்பாயிலுள்ள பந்த்ரா, குர்லா என்னும் பலிக்களங்களில் 1928-ல் 26522 எருமைகளும், 19270 கன்றுகளும் அறுக்கப்பட்டிருக்கின்றன! வருஷத்திற்கு இருபதினாயிரம் பால் மாடுகளையும், அதேயளவு கன்றுகளையும் கொன்றுவிட்டால் பால் எங்கிருந்து கிடைக்கும்?

0 0 0

பொய்க்கூற்று:... டாக்டர் அம்பட்கார் என்பவர் தாழ்த்தப்பட்டவர்களுக்காக உழைப்பவர். அவர் சைமன் கமிஷனுக்கு அறிவிக்கவேண்டி ஒரு பொய் கட்டிவிட்டார். ஷோலாப்பூர் முனிசிபாலிடியார், அவ்வூரிலுள்ள தாழ்த்தப்பட்டவர்கள் மற்ற ஹிந்துக்களோடு சேர்ந்துகொண்டு முஸ்லிம்களுடன் கலகம் செய்ய மறுத்ததால் அவர்கள் பள்ளிக்கூடத்துக்குக் கொடுக்கப்பட்டுவந்த 'கிராண்டு' தொகையை நிறுத்திவிட்டார்களென்று டைடாக்டர் கூறியிருக்கிறார். ஷோலாப்பூர் முனிசிபல் சபையார் விசாரணை செய்ததில் டாக்டர் அம்பட்கார் கொடுத்த பணத்திற்குச் சரியான கணக்கு ஒப்புவியாததால் பணம் நிறுத்தப்பட்டதாய்த் தெரிகிறது. இதுபோல் எத்தனை பொய் மூட்டைகள் கமிஷனரிடம் அவிழ்க்கப்பட்டிருக்குமோ?

0 0 0

திரு. செயின்ட் நிஹல்சிங்:... உலகில் கற்றறிந்த பெரியாரெல்லாம் போற்றும் திரு. செ. நிகல்சிங்கை அறியாதார் மிகச் சிலரே. நமது 'இலங்கை இந்தியன்' ஆங்கிலப் பதிப்பில் அவர் பொருள் பொதிந்த ஒரு சிறிய கட்டுரை வரைந்திருக்கிறார். அதில் கூறுவதாவது:—

"15-வியாழக்கிழமை நிறைவேறிய (வாக்குரிமை) தீர்மானத்தைக் குடியேற்ற நாட்டு மந்திரி ஒப்புக்கொண்டால், அதனால் இலங்கை இந்தியரில் ஐந்தில் நான்கு பாகத்தவரும், மலையாளம், தெலுங்கு முதலிய பாஷைகளில் வல்லவர் சிலரும் 'ஓட்' உரிமை இழந்து நிற்பர். சிங்களவர், இலங்கைத் தமிழர், முஸ்லீம்கள்—இவர்கள் கதியென்ன? அவர்களிலும் மூன்றில் இரண்டு பாகத்தாருக்கும் 'ஓட்' இல்லாது போய்விடாதா? இந்தியர்க்கு எதிராகவுள்ள கூட்டத்தார் இந்தத் தந்திரத்தால் எவ்வளவு வெற்றியடைந்தபோதிலும் அவ்வெற்றி இலங்கையரை அதிலும் சிங்களவரை நஷ்டப்படுத்தியே பெறப்படுகின்றது. நான் சிங்களவராயிருந்தால் இவ்வெற்றி அளவுக்கு மிஞ்சிய மிகுந்த நஷ்டத்துடன் கிடைத்ததாய்க் கருதுவேன்". மற்றும் காங்கிரஸ் கட்சியிலுள்ள சிறுபான்மைக் கட்சியார்தான் இன்னல் விளைக்கின்றனரென்றும் மற்றையோர் இனியாவது ஆலோசித்துக் காங்கிரசின் பழைய கொள்கைகளைப் புனருத்தாரணம் செய்ய வழியிருக்கிறதென்றும் கூறியிருக்கிறார். இந்த யோசனை நிறைவேறுமா?

0 0 0

பரோடா மகாராணி:... "கல்வி கற்காத ஒரு ஸ்திரீ தன் குழந்தைகளுக்கும் சமூகத்துக்கும் அபாயம் விளைக்கக்கூடியவள். இந்தியாவில் பெண்கள் கல்விக்கு இரண்டு தடைகள் இருக்கின்றன; ஒன்று அந்தப்புரத்தில் வாழ்வது (பர்தா), மற்றது இளமை மணம். ஐரோப்பா யுத்தத்திற்குப் பின்பு துருக்கி, பாரசீகம், ஆப்கனிஸ்தானம் முதலிய நாடுகளில் இவ்விரண்டு தீயவழக்கங்களும் தொலைக்கப்பட்டிருக்கின்றன. ஒரு நூற்றாண்டுக்குமேல் ஆங்கில ஆட்சிக்குட்பட்டிருக்கும் இந்தியாவில் இன்னும் இத்தீமைகள் ஒழியவில்லை; இவை எங்கும் சகஜமாய்க் காணப்படுகின்றன" என்று பரோடா மகாராணியார் இங்கிலாந்தில் கூறியிருக்கிறார். துருக்கியில் முஸ்தாபா கமால் பாஷாவும், ஆப்கனிஸ்தானத்தில் அமீர் அமானுல்லாகானும் அதிபதிகளாயிருக்கிறார்கள். இந்தியாவிலோ?

0 0 0

இந்தியக் கிறிஸ்தவர்களின் பெருந்தகைமை:... இந்தியாவில் கிறிஸ்தவர்கள் சிறுபான்மையாக உள்ளவர்கள். தங்கள் வகுப்பினர் குறைவாயிருப்பதால் அவர்கள் அரசாங்கத்தாரிடம் தனி உரிமைகள் கேட்டு அவற்றைக் காத்துக்கொள்ள விரும்பக்கூடும். ஆனால் சமீபத்தில் சைமன் கமிஷன் முன்பு அவர்களுடைய பிரதிநிதிகள் தங்களுக்குத் தனி உரிமை வேண்டாமென்றும், தேசியக் காரணங்களை முன்னிட்டுத் தனித்தேர்தல் தேவையில்லையென்றும், தங்கள் பிரதிநிதிகளாக அரசாங்கத்தார் சிலரை நியமிப்பதால் (நாமிநேஷன்) நியமிக்கப்பட்டவர்கள் பொதுஜனங்களின் நம்பிக்கையை இழப்பதோடு சுரைத்தனத்தாருடைய கிர்ப்பத்திற்கும் உள்ளாகவேண்டியிருக்கிறதென்றும் வகுப்புவாரியாக உத்தியோகஸ்தர் நியமிப்பதில் தங்களுக்குப் பிரியமில்லையென்றும் கூறிவிட்டனர். வகுப்புப் பூசல்கள் நிறைந்திருக்கும் இந்தியாவில் கிறிஸ்தவர்கள் இவ்வாறு பெருந்தன்மையுடன் நடந்துகொண்டது பாராட்டத்தக்கது.

0 0 0

ராஜாவின் உபாத்தியாயர்:... சமீபத்தில் மகுடந்தரித்த புதுக்கோட்டைராஜாவுக்கு உபாத்தியாயராகத் திரு. பி. எச். ராமசந்திரராவ் நியமிக்கப்பட்டிருக்கிறதாய்த் தெரிகிறது. திரு. ராவ் நல்ல உபாத்தியாயராகவும், உதவி மாஜிஸ்டிரேடாகவும் இருந்திருக்கிறார். நல்வேளையாக ஒரு இந்தியர் இவ்வேலைக்காக நியமிக்கப்பட்டிருப்பது யாவருக்கும் மகிழ்ச்சிகொடுக்கும்.

0 0 0

இந்தியா சட்ட மெம்பர்:... வைசிராய் நிர்வாக சபையில் காலஞ்சென்ற திரு. எஸ். ஆர். தாஸின் ஸ்தானத்தில் புதியசட்ட மெம்பர் நியமிக்கும் விஷயமாக ருசிகரமான சில தகவல்கள் கிடைத்திருக்கின்றன. ஸர் வி. பி. ராமசுவாமி அய்யர் திரு. எம். ஆர். ஜயகர், ஸர் ஹரிசிங்கோர், ஸர் பி. எல். மித்தர், திரு. முல்லா, திரு சங்கரன் ஆறுவருடைய பெயர்களும் சிபார்சு செய்யப்பட்டன. இவர்களில் வைசிராய் ஸர். ராமஸ்வாமி அய்யரை நியமிக்க எண்ணியிருந்தாராம். சென்னையிலுள்ள பனகல் ராஜா அவரை நியமித்தால் தான் சைமன் கமிஷனை பகிஷ்கரிப்பதாய்ச் செய்தி அனுப்பினாராம். வைசிராய் அடுத்தாற்போலுள்ள திரு ஜயகாரை நியமிக்க முயன்றார். ஸர். ஜான் சைமன் ஜயகார் தீவிரபகிஷ்காரக்கூட்டத்தைச் சேர்ந்தவராதலால் அவரை நியமிப்பது தனக்குக் கேவலத்தை உண்டுபண்ணுமென்று தடுத்திருக்கிறார். சீமையிலுள்ள இந்தியா மந்திரிக்கும் அவர் இச்செய்தியை அனுப்பியுள்ளார். முதலிலுள்ளவரை நியமித்தால் பனகல் அரசர் விலகிவிடுவார். இரண்டாவதுள்ளவரைநியமித்தால் ஸர் சைமன் கமிஷனிலிருந்து ராஜிநாமா செய்தல் கூடும். மூன்றாவது நபரை ஸர் சைமன் சிபார்சு செய்திருப்பதால் அவரை நியமித்தால்வைசிராய்ராஜிநாமாசெய்தல் கூடும். பேஷ்! சட்டமெம்பர் ஸ்தானம் பாக்கியமுள்ளதுதான்! அதையொட்டி இப்படித்திரிகோணப்போர் (triangular fight) நடக்க வேண்டியது அவசியமே.

0 0 0

புதிய சட்ட அங்கத்தினர்:... கடைசியாக ஸர் பி. எல். மித்தரே வைசிராய் நிர்வாக சபையில் சட்டமெம்பராக நியமிக்கப்பட்டதாய்ச் செய்தி கிடைத்திருக்கிறது. வைசிராயும் இந்தியா மந்திரியும் தங்கள் கொள்கைகளுக்கு மாறுபடாது நடந்துகொள்ளக்கூடிய தக்க மனிதரையே தேர்ந்தெடுத்திருக்கின்றனர். ஸர் சைமன் இதுவிஷயத்தில் தான் கலந்துகொள்ளவில்லையென்று கூறுகிறார்.

0 0 0

கனம் படேலின் துக்கம்:... இந்தியா சட்டசபை அக்ராசனரான கனம் வி. ஜே. படேல் சென்ற மீ 26-ம்உ சென்னைக்கு விஜயஞ் செய்தார். அவரைப் பல சபையார்களும் ஸ்தாபனங்களும் வரவேற்பதற்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. அவரும் எல்லோருடைய அழைப்பையும் ஒப்புக்கொண்டிருந்தார். ஆனால் இந்தியா சட்டசபை அங்கத்தினரும் பிரபல தேசியத் தலைவருமான லாலா லஜபதிராய் திடீரென்று காலஞ்சென்று விட்டதால் அப்பெரியாரின் ஞாபகார்த்தமாய்த் தாம் துக்கப்பட்டுக்கொண்டிருக்கும் பொழுது எவ்வித வரவேற்பையும் உபசரிப்பையும் பெற்றுக் கொள்ளமுடியாதென்று மறுத்துவிட்டார். உண்மையில் இத்தகைய பெரியார்களைப் பெற்றதனாலன்றோ இந்தியா இன்றும் தலைநிமிர்ந்து வாழ்ந்து வருகிறது! அவர்களே இந்தியாவின் ஜீவ சக்தியாயிருக்கிறார்கள்.

0 0 0

அகராதி வியாக்யானம்:... சுதேச சமஸ்தான விஷயங்களைப்பற்றி இந்தியாவில் பட்லர் கமிட்டியார் விசாரித்து வருகின்றனர். இக்கமிட்டி முன்பு பிரஜைகள் தங்கள் குறைகளை எடுத்துச் சொல்ல முடியாதென்று இந்தியா உதவி மந்திரியான யர்ல். வின்டர்டன் பார்லிமென்டில் கூறியிருக்கிறார். அவர் அகராதியைப் போல் வார்த்தைகளின் பொருளை வியாக்யானம் செய்திருப்பது ஆச்சரியத்தை விளைக்கிறது. கமிட்டிவேறு, கமிஷன் வேறுஎன்று கூறி கமிஷன் முன்புதான் பிரஜைகள் சாட்சியம் கூறலாமென்று அவர் சொல்லியிருக்கிறார். இரண்டும் வெவ்வேறு பதங்கள்தான். ஆனால் கிரியாம்சையில் இரண்டும் ஒன்றாகக்கருதியே நடத்தப்பட்டு வருகிறது. ஜனங்களுடைய குறைகளைப் பத்திரிகைகள் மூலமாயும், பிரசங்கங்கள் மூலமாயும் தெரிவித்துக் கொள்ளலாம் என்று அவர்கூறுகிறார். அவர் நயவில்லாமலே பிரஜைகள் வெகுகாலமாக அப்படித் தான் செய்து வருகிறார்கள். சமஸ்தானங்களுக்கும் பிரிட்டிஷ் இந்தியாவுக்கும் இருந்துவரும் சம்பந்தம்போன்ற முக்கியமான விஷயங்களைப் பரிசீலனை செய்வதற்கு ஆடம்பரத்துடன் வந்திருக்கும் பட்லர் கமிட்டிமுன்புகூறப்படும கூற்றுக்களில் எதையும் பொதுஜனங்கள் அறிந்துகொள்ளவழியில்லாது தடுப்பதும், அவர்கள் அபிப்பிராயங்களையும் கேட்கமறுப்பதும் கமிட்டிகமிஷனில்லை என்று கூறுவதும் மிகவும் ஆச்சர்யமாயிருக்கிறது.

## விகடத் துணுக்குகள்.

பிரபு (பிச்சைக்காரனைப் பார்த்து):— ஏண்டா தடிப்பயலே! நீ வேலைசெய்து ஜீவிக்கிறதற்கென்ன?

பிச்சைக்காரன்:— மகராஜ்! நான் பிச்சைக்குத்தான் வந்தேன், புத்திமதி பெறுவதற்காக இல்லை.

0 0 0

முதலாளி:— என்ன கணக்குப்பிள்ளை! உமக்கு வியாபார சாமர்த்தியமே தெரியாதோ?

க. பிள்ளை:— எனக்குத் தெரிந்ததைச் செய்து வருகிறேன். இன்னும் சாமர்த்தியம் என்றால் என்ன?

முதலாளி:— போங்காணும். ரவிக்கை வாங்க வந்தபெண்ணுக்கு ஒருபுடவையும் விற்கவேண்டாமா?

0 0 0

வார்டர்:— நீஎன்ன குற்றம்செய்து இப்படி ஜெயிலுக்கு வந்தாய்?

கைதி:— தும்மின குற்றத்திற்காக.

வா:— அது ஒரு குற்றமாகுமா?

கைதி:— இரவில் கன்னமிட்டுக் கொண்டிருந்த பொழுது தும்மிவிட்டேன். வீட்டிலிருந்தவர் எல்லோரும் எழுந்துவந்து பிடித்துக் கொண்டார்கள்.

0 0 0

கண்டன்:— உன்பெண்சாதி சாந்தகுணமுள்ளவளா?

மணியன்:— ஆம், தூங்கும்பொழுது மட்டும்.

0 0 0

ஒரு மெலிந்த பையன் வாடகை மோட்டாரில் போய்க் கொண்டிருந்தான். வழியில் ஒருதடித்தஸ்திரீயும் அவன்பக்கத்தில் ஏறி உட்கார்ந்து கொண்டாள். சிறிதுநேரம் கழிந்து,

பையன்:— டிரைவர்! இனிமேல் தடித்த ஆசாமிகளுக்கு அதிகசார்ஜ் வாங்கவேண்டும்.

தடித்தஸ்திரீ:— அப்படியானால் உன்னைப்போல் மெலிந்தவரைஏற்றிக்கொள்வதற்காக வண்டியை நிறுத்தமாட்டார்கள். அதிக சார்ஜ்கொடுக்கும் எங்கள் பாடுதான் யோகம்.

---

## "நமது இலக்கியம்"

கண்டி, பௌத்த வாலிபர் சங்கத்தில் திரு. வி. இ. எஸ். பெரைரா, அட்வகேட், தேசியவாழ்வின் இலக்கியத்தின் அவசியத்தைப்பற்றி நிகழ்த்திய சொற்பொழிவின் சாரமாவது:—

"சிங்களவர்கள் வெகுகாலமாகத் தங்களுக்கு எவ்வித இலக்கியமுமில்லாததுபோல் எண்ணிவந்திருக்கின்றனர். வெளிநாடுகளில் இரண்டு ஜப்பானியர்களோ, ஆப்கானியர்களோ அல்லது அபிசீனியர்களோ சந்தித்தால் அவர்கள் தங்கள் தாய்ப்பாஷையிலேதான் சம்பாஷிப்பது வழக்கமாயிருக்கிறது. ஆனால் சிங்களவர்இருவர் சந்தித்தால் அவர்கள் பேசும் பாஷைஆங்கிலமாக இருக்கிறது. ஐரோப்பியர்கள் முன்பு தங்கள் தாய்ப்பாஷையில் பேசுவதற்குச் சிங்களவர் வெட்கப்படுகின்றனர். நமது பண்டைச் சரித்திரம் நமது கவிகளாலும், புலவர்களாலும் பெரிதும் அமைக்கப்பட்டிருப்பதை அவர்கள் அறியவில்லை. நமது சரித்திரம் ஆங்கிலத்தின்மேல் கட்டப்படவில்லை. முழுதும் வளர்ந்துவிட்ட ஒரு செடியை மித சீதோஷ்ணப் பிரதேசத்திலிருந்து பிடுங்கி அதிக உஷ்ணப்பிரதேசமான நாட்டில் கொணர்ந்து நட்டால் அது வளர்ச்சிபெற முடியாது.

"நாம் ஆங்கிலத்தில் எளிதிற் பேசக்கூடிய புலமை பெற்றிருப்பதன் பயன் யாது? நமது எண்ணங்களெல்லாம் ஆங்கிலத்திலேயே தோன்றுகின்றன. ஆங்கில நாட்டின் சுபாவத்தை ஒட்டியே நம் கருத்துக்களும் தோன்றுகின்றன. சுயமாக நமக்கு இயற்கையாயுள்ள நிலையில் நாம் ஆலோசனை செய்யமுடியவில்லை. நம் நாட்டு நாய்கள், பூனைகள், பறவைகள், பழங்கள், மரங்கள், இயற்கை வனப்பு எதைக் காணினும் நமக்கு வெறுப்புத் தோன்றுகின்றது. நமது நாய்கள் மிலேச்ச நாய்களாய்ப் போய்விட்டன, நமது கோழிகள் நாட்டுப்புறத்துப்பறவைகளாகக் கழிக்கப்படுகின்றன. செம்முள்ளங்கிக் கிழங்கையும், கொலூலக் கிழங்கையும் (டர்ணிப்)கூட உயர்ந்த கறிவகைகள் என்று நாம் போற்றுகின்றோம்.

"இலங்கை உலகத்திலுள்ள மற்றைநாடுகளுக்கு நிகரான அழகு வாய்ந்திருக்கிறது. அதன் சரித்திரம் இங்கிலாந்தினுடைய சரித்திரத்தைவிட பழமையானது. இத்தகைய நிலைமையில் நமக்கு இந்தப் பயங்கரமான வீழ்ச்சி எப்படி ஏற்பட்டுவிட்டது? இன்று நமது ஜனங்கள் தமக்கென்று ஒரு சொந்த மொழியில்லாது நிற்கின்றனர்!

"போர்த்துகீசியர், டச்சுக்காரருடைய குழப்பமான காலந் தொடங்கி, சுமார் ஒரு நூற்றாண்டுக்குமேல் நமது பாஷையை இழந்துவந்திருக்கிறோம். இப்பொழுது திடீரென்று அதைப் பெற்றுவிடுதல் கூடாத காரியம். நமது பாஷையில் உன்னதமான சிறிய நூல்கள் எழுதி, உலகோர் அவற்றை மொழிபெயர்த்துப் படிக்கவேண்டுமென்ற ஆசையை உண்டாக்குவதற்கு இன்னும் அநேக தலைமுறைகள் கழியவேண்டியிருக்கும். நாம் ஆங்கிலம் பயின்றுவந்த இந்த ஒரு நூற்றாண்டில் இலக்கியம் என்று ஒப்புக்கொள்ளத்தக்க முறையில் ஆங்கிலத்தில் ஒரு கவியாவது, ருசியுள்ள வசனத்தில் ஒரு பத்தியாவது எழுதமுடிந்திருக்கிறதா?

"இவ்விஷயங்களை நாம் தெளிவாயும், நுட்பமாயும் அறிந்துகொண்டபின்புதான் நமது இயற்கை வனப்பையும், சரித்திரத்தையும் உலகறிய எடுத்துரைப்பதற்கு நம்மிற் சிலர் தோன்றுதல் கூடும்." மற்றும் இலங்கைத் தீவில் இயற்கையன்னை எழிலுடன் பிரசன்னமாயிருந்து நிர்த்தனம் செய்யும் சடுகன்னவா, தனிந்தா, மகாவலி, கண்டி, நுவாரஇலியா முதலானவிடங்களின் பெருமையையும், இடிந்துபோன பழைய கோயில்கள், அரண்மனைகள் முதலியவற்றின் காம்பீரியத்தையும் அழகையும்பற்றி திரு. பெரைரா கேட்போர் மனம் உருகும்படி எடுத்துரைத்து அவற்றையெல்லாம் படைத்த இலங்கையர் பழம்பெரும் சரித்திரமுடைய இந்நாட்டார் அவற்றைப்பற்றி உலகறிய எடுத்துக்கூறப்போகும் நாள் எந்நாளோ அதுவே நன்னாளென்று கூறி முடித்தார்.

---

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

வெகுசமீபத்தில் வருவதை அவன் கண்டான் கிழட்டு ஞானம் மிருதகளிப்படைந்து துள்ளிக் குதித்தான். அவனுக்கு ஒரு யோசனை தோன்றிவிட்டது. அவன் தன் தலைப்பாகையில் பாதியைக் கிழித்து வலதுகையில் வைத்துக்கொண்டு இடதுகையை தூக்கி இருப்புப் பாதையின்மேல் அடித்தான். அக்கையிலுள்ள எலும்புகள் ஒடிந்து உள்ளிருந்து செக்கர்வானம்போல் உதிரம் பெருகி ஓடிவந்தது. ஞானம் கையிலிருந்த துணியை அதில் நன்றாய் நனைத்து அதைத் தான் கொண்டுவந்திருந்த கைத்தடியில் சுற்றி புகைவண்டிக்கு முன்னால் நீட்டிப் பிடித்தான். புகைவண்டி அவனருகில் வந்ததும் இரத்தமயமான சிவப்புக் குறியைக் கண்டதும் நின்றுவிட்டது. வண்டியிலிருந்து 'கார்டும்' மற்றவரும் கீழே இறங்கிப் பார்த்தார்கள். இருப்புப் பாதை உடைபட்டுக் கிடந்தது கிழவன் பிடித்த செண்டாவும் கையுமாகக் கீழே மூர்ச்சையுற்று வீழ்ந்துவிட்டான். அவனருகில் கண்ணீர் பெருகவிட்டுக்கொண்டு முத்துக்குமாரு, "யஜமான்களே! குற்றம் செய்தது நான். பேருபகாரியான இக்கிழவன் நான் செய்த தீமையை விலக்கி நன்மை புரிய இதோ உயிரை விட்டுவிட்டான். இதை மறைவிலிருந்து பார்த்துக்கொண்டிருந்த எனக்கு மனம் பொறுக்கவில்லை. என்னை உங்கள் இஷ்டப்படி செய்யுங்கள்" என்று கூறினன்.


# குழந்தையின் ஆரோக்கியம்

குழந்தைக்குத் தாய்ப்பால் இல்லாவிடில் கொடுக்க வேண்டிய சிறந்த உணவு "லக்டோஜன்" ஒன்றே


"லக்டோஜன்" உணவின் பரிசுத்தமும், போஷனை சக்தியும், உபயோகத்திற்கு ஏற்றதன்மையும் ஆயிரக்கணக்கான தாய்மார்களால் நிரூபிக்கப் பட்டிருக்கின்றன. அதன் மேன்மைக்குணம் உலகத்தின் பலபாகங்களிலுள்ள தலைசிறந்த வைத்தியர்களாலும், தாதிகளாலும், படுக்கையும்பாயுமாய்க் கிடந்த நோயாளிகளாலும் உணர்ந்து போற்றப்பட்டிருக்கிறது. உங்கள் குழந்தைக்கும்

"லக்டோஜன்"

என்ற குழந்தைகளுக்கும்நோயாளிகளுக்கும் ஏற்றஇயற்கைஉணவைக் கொடுத்துப் பயனடையுங்கள்.

இந்த உயர்ந்த உணவைப்பற்றிய முக்கிய விவரங்களும் உணவின் மாதிரியும் வேண்டிக் கொள்ளும் பெற்றோருக்கு இலவசமாய் அனுப்பப்படும்.

நெஸில்ஸ்,
NESTLES (C. 3)
தபால்பெட்டி நம்பர் 189,
கொழும்பு.






# "ஹோமொஜென்"

ஹோமொஜென் உயர்ந்த ஆஸ்டிரேலியன் பசுக்களின் பாலிலிருந்து புத்தம்புதிய ரசாயனமுறைகளில், மனிதர் கைபடாமல் தயாரிக்கப்படுகிறது.

ஹோமொஜெனில் குழந்தையைப் புஷ்டியுடன் வளர்ப்பதற்கு வேண்டிய சகல பொருள்களும் போதிய அளவு சேர்ந்திருக்கின்றன.

ஹோமொஜென் பரிசுத்தமானது, எளிதில் ஜீரணமாகக்கூடியது, வயிற்றுக்கு இதமானது. மாதிரிக்கு எழுதவும்.




SOLE AGENTS FOR CEYLON:—
The Central Medical Stores
Main Street, COLOMBO.


# சட்டசபையில் சீர்திருத்தமும் பொது ஊழிய ஸ்தாபனமும்.

## 'கௌரவ' பட்டம் தேவையில்லை

நவம்பர் 23-ம் உ கௌரவ கன்னன்கார கொண்டுவந்திருந்த தீர்மானத்தைப்பற்றிச்சென்றவியாழக்கிழமையும் விவாதம் நடந்தது. தீர்மானத்தின் முக்கியப்பிரிவுகள் வருமாறு:...

(1) புதிய கவுன்சில் சட்டத்தில் பொது உத்தியோகஸ்தருடைய சம்பளம், படித்தனங்கள், உதவிச்சம்பளம், உத்தியோகஉயர்வு, வேலை நியமங்கள் முதலியவற்றில் குடியேற்ற நாட்டு மந்திரியே முடிவான தீர்மானம் கூறவேண்டியவர் என்று ஒருபிரிவை அமைப்பதற்குக் கூறப்பட்டிருக்கும் ஆலோசனையை இச்சபை நிராகரிக்கிறது.

(2) பொது உத்தியோக இலாகாக்களை விசாரிக்க இனியேற்படப் போகும் கமிஷனுக்கு விசேஷகமிஷன் தேவையென்று குறிப்பிட்டிருப்பதற்கு அதிகமான அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கிறது என்று இந்தச்சபை கூறுகிறது.

(3) ஒவ்வொரு இலாகாவின் ஒழுங்குமுறையும் அதிகாரமும் அந்தந்த இலாகாவின் மந்திரிவசம் இருக்க வேண்டும்.

இத்தீர்மானத்தை ஆதரித்து ஸர். பி. ராமநாதன் தீவிரமாய்ப்பேசினர். கௌன்ஸில் அங்கத்தினர்கள் எக்காலத்திலும் அரசாங்கத்தை எதிர்த்து நிற்க வேண்டுமென்று ஒரே விதமாய் இருக்கவில்லை யென்றும், கமிஷனர்கள் தங்கள் யசமானரான மன்னர் அமைத்துள்ள கௌன்ஸில் சட்டத்தைப்பற்றி பரிசீலனை செய்தது விந்தையாயிருக்கிறதென்றும், பொதுப்படக் கொடுக்கப்பட்ட சாட்சியங்களை விட்டுவிட்டுத் தனித்தசம்பாஷணைகளில் தெரிந்துகொண்ட விஷயத்தை வைத்துக் கொண்டு கவுன்ஸில் அங்கத்தினர்களைக் குறைகூறி யிருக்கின்றனரென்றும் ஸர் ராமநாதன் எடுத்துரைத்தார். மிஸ்டர் ஜியார்ஜ் பிரௌன் தீர்மானத்தை எதிர்த்துப் பேசினர். கௌரவ கன்னன்கரா விவாதத்திற்குப் பதில் கூறி முடிக்கையில், "அதிகார வர்க்கத்திற்குச் சவக்குழிதோண்டும் மண்வெட்டி ஓசை எனக்குக் கேட்கிறது; அகங்காரத்துடன் நடந்துவரும் உத்தியோகமுறைக்குச் சாவுமணி அடிக்கப்படுவதை நான் கேட்கிறேன்; பழக்குலைகளுடன் கூடிய பக்தர்கள் இனி மாகாண அதிபதிகளுக்குப் போடப்படமாட்டா; அதிகாரமும் வீண் கௌரவமும் முன்னவருக்கு இனி நடை பாவாடை விரிக்கப் படமாட்டாது." என்குகூறினர்.

தீர்மானத்திற்குச் சாதகமாக 22-பேரும் பாதகமாக 4-பேரும் ஓட்டுச் செய்ததால் தீர்மானம் நிறைவேறியது.

சம்பள நிர்ணய கமிஷன் இப்பொது ஏற்படுத்த வேண்டிய அவசியமில்லையென்றும் பின்னர் அவசியப்பட்டால் சட்டசபையே அமைத்துக் கொள்ளவேண்டுமென்றும், ஏற்படுத்திய கமிஷன் செய்யும் சிபார்சுகள் சபையின் ஆமோதிப்பைப் பெற வேண்டுமென்றும் ஒரு தீர்மானம் நிறைவேறியிருக்கிறது.

ஐம்பதினுயிரத்திற்குக்குறைந்தஜனத்தொகையுடன் கூடியதாக யிருந்தாலும் ஒவ்வொரு ரெவினியூ ஜில்லாவும் ஒரு அங்கத்தினரைத் தேர்ந்தெடுத்து அனுப்பலாமென்றும் ஓட்டர்களை ரிஜிஸ்டர் செய்யும்வேலையை அரசாங்கத்தாரேசெய்துவர வேண்டுமென்றும்,கமிஷனர் விண்ணப்பித்துக் கொள்பவரையே ஓட்டராகப் பதிவுசெய்து கொள்ள வேண்டுமென்று கூறியிருப்பதன்படி நடக்கக்கூடாதென்றும் தீர்மானங்கள் நிறைவேறின.

மற்றும் நிறைவேறிய முக்கிய தீர்மானங்கள்:— "பிரதம காரியதரிசி உத்தியோகத்திற்கு இங்குள்ள சிவில் சர்விஸ்காரர்மட்டும் அருகரென்றிருக்கக் கூடாது என்று இந்த சட்ட சபை அபிப்பிராயப்படுகிறது."

"1875-லிருந்து சட்டசபை அங்கத்தினர்கள் வகித்துவரும் 'கௌரவ' என்றபட்டம் இனி வழங்கவேண்டிய அவசியமில்லை."

# நாடகமும் பொது ஜனங்களும்.

சமீபத்தில் வெளியான 'ஹிந்து' இலக்கிய அனுபந்தத்தில் திரு. ஹரீந்திரநாத் சட்டோபாத்யாய ருஷிய நாடகத்தைப்பற்றி ஒரு கட்டுரை எழுதியுள்ளார். அவர் நவீன இந்தியாவில் தோன்றி தொண்டு செய்துவரும் ஒரு சிறந்தகவி. சில நாடகங்களையுமவர் இயற்றியுள்ளார். மேல்நாட்டு நாடகமுறைகளை நேரில் பார்த்துக் கற்றுவரவே அவர் அங்கு சென்றிருந்தார். அவர் குறிப்பிடுவதாவது:— "நீங்கள் ருஷியாவுக்கு ஒருநாளாவது சென்றுபார்த்தால் ருஷியா ஜனங்கள் பொதுவுடைமையையும் புதிய சோவியத் அரசாங்கத்தையும் பற்றிஎவ்வளவு பேசுகிறார்களோ அதேயளவு நாடகத்தைப்பற்றியும் பேசுவதைக்கண்டு ஆச்சரியப்படுவீர்கள்."

ருஷியாவில் நாடகமென்பது அரசகுடும்பத்தாரும் பிரபுக்களும் கண்டுகளிக்கும் காட்சியாகவே வெகுநாள் இருந்துவந்தது. ஆனால் 1905-ம் வருஷத்திலிருந்து தொழிலாளர் தலைவர்களும் சாதாரண ஜனங்களும் சிறிது சிறிதாக ஊக்கம்பெற்று 1917-க்குப் பிறகு நாடகத்தையும் நாடகசாலையையும் பொதுஜன உபயோகத்திற்கென்று உரிமையுடன் கொண்டாடினார்கள். தற்போது ருஷியாவில் உழைப்பவனுக்குத்தான் உணவு கிடைக்கும்; உழுபவனுக்குத்தான் நிலம், தொழிலாளிக்கே தொழிற்சாலை யென்று ஏற்பட்டிருக்கிறது. எனவே நாடகத்தையும் பொது ஜனங்கள் உடைமையாய்க் கருதிப் பெற்று வளர்த்துவருவதில் ஆச்சரியமில்லை. ஜனங்கள் எப்பொழுது எவ்விதக் கொடுமைக்குப் பணியாது விடுதலைபெற்றனரோ அப்பொழுதே சுதந்திரவுணர்ச்சிததும்பும் பலநாடகாசிரியர்கள் முன்வந்தனர்கள். பற்பல அழகிய நாடகங்களும் வெளிவந்தன. இன்று ருஷியப்பெருநகர்களானமாஸ்கோ, பெட்ரோகிராட் முதலியவிடங்களில் நாடகரசம் ததும்பி வழிவதாய் ஆசிரியர் கூறுகிறார். நேற்றுவரை கொடுமையில் உழன்று, அறியாமை என்னும் அந்தகாரத்தில் மூழ்கிக்கிடந்த ருஷியர்கள் இன்று திடீரென்று அறிவுபெற்று வருகிறார்கள். அறிவை முக்கியமாக வாழ்விற்கு அவசியமான அறிவைப் புகட்டுவதற்கு நாடகமேடை ஓர் சிறந்த சாதனமாக அந்நாட்டில் கருதப்படுகிறது.

நமது இந்தியாவில் தற்போதுள்ள நாடகமேடையை நினைத்தால் மிகவும் பரிதாபமாயிருக்கிறது. ஒன்றிரண்டு நாடகக்குழுவினரைத் தவிர மற்றவர் நாடகங்கள் ஜனங்களுக்கு இழைக்கும் தீமைக்கு அளவில்லை. உண்மையான அறிவு ஜனங்களுக்குப் புகட்டப்படவில்லை. நாடகங்களினால்ஜனங்களிடம் ஒழுக்கத்தை வளர்க்க முடியவில்லை. உறங்கிக் கிடக்கும் ஜனங்களுக்கும் புதியகொள்கைகளையும் உணர்ச்சிகளையும் கொடுத்துத்தட்டியெழுப்பக் கூடிய வன்மைநமது நாடகங்களுக்குமில்லை. இது மிகவும் வருந்தத்தக்க விஷயம். தற்கால நாடகத்தால் தின்மையே விளையும்பொழுது அதனிடம் நன்மையை எதிர்பார்ப்பது எங்ஙனம்? மேலும் தற்கால நடிகர்கள் பொருளொன்றையே கருதிச் சுயநலத்திற்காக நடிக்கின்றனர்.

நமது தேசபாஷைகளில் நவீனமான உணர்ச்சிகளையும் தத்துவங்களையும் அடக்கிப்பல நாடகங்கள் எழுதப்படவேண்டும். ஜனங்களிடையே தற்போது காணப்படும் இழிசெயல்களும் நடத்தைகளும் நாடகமூலமாய் எடுத்துக்காட்டப் படவேண்டும். வாழ்வைப்பற்றிய ஆராய்ச்சியே யில்லாது ஜனங்கள் சோர்ந்துகிடக்கும் நிலையிலிருந்து எழுப்பப் படவேண்டும். அறிவைப்பரப்புவதற்குச் சிறந்த சாதனமாயுள்ள நாடகத்தை நாம் எதுவரை மறந்து கிடக்கிறோமோ அதுவரை நமக்கு விடிவுகாலமில்லை. நிறைந்த அனுபவமும் ஒழுக்கமும் வாய்ந்த நடிகர்களைக்கொண்டு சீரிய நாடகங்கள் நடத்தினால் பொதுமக்கள் பல்லாண்டு வாழ்ந்து பெறவேண்டிய அனுபவத்தையும் அறிவையும் பெற்றுய்ய வழியேற்படும். நாடகத்தில், இருக்கும் நிலையமட்டும் காட்சியாக எடுத்துக்காட்டாது வருங்கால மகோன்னத நிலையையும், சுதந்திரக்காட்சிகளையும், ததாருபமாக நடித்துக்காட்டினால் மிகுந்த பலனுண்டாகும். இவற்றிற்கெல்லாம் நாம் சுதந்திரம் கிடைக்கும்வரை காத்திருத்தல் கூடாது.

# இலங்கை இந்தியன்.

1928-ளு டிசம்பர் மீ 5 உ

## லக்ஷ்மணபுரியில் போலீஸ் அட்டூழியம்

இந்திய அரசியல் விஷயமாக விசாரணை செய்வதற்காக சைமன் கமிஷன் நியமிக்கப்பட்டதிலிருந்து ஒரு புதிய சாபதம் பிறந்திருப்பதாய்த் தெரிகிறது. கமிஷன் விசாரணையினால் அதிகச்சுதந்திரம் கிடைக்குமோ, அன்றி இருப்பதும் பறிமுதல் செய்யப்படுமோ என்பதைப்பற்றி நமக்குக் கவலையில்லை. ஆனால் அவர்கள் செல்லும் இடங்களில் விசித்திரமான காரியங்கள் நடைபெறுகின்றன. கமிஷன் லாகூருக்குச் சென்ற பொழுதுதான் ஜனங்களுக்குத் தலைமை வகித்துவந்த லாலா லஜபதிராய் போலீஸாருடைய மிருகத்தனத்திற்கு ஆளாக நேர்ந்தது. அவருடைய வைத்தியர்கள் வெளியிட்டுள்ள அறிக்கையிலிருந்து லஜபதிராய் போலீஸாரால் அடிக்கப்பட்ட நான்முதலே தளர்ந்து கொண்டு வந்ததாகவும் அந்த அடியே அவர் மரணத்தைத் துரிதப்படுத்தக் காரணமாயிருந்ததென்றும், அடிபடாமலிருந்தால் லஜபதி இன்னும் வெகுகாலம் ஜீவித்திருக்க முடியுமென்றும் தெரிகிறது. லாகூரில் போலீஸ் சில்லரைத் தேவதைகள் வெறிகொண்டு, மூர்க்கத்தனமாய், பொறுப்பின்றி வீரதிலகமான பாஞ்சால சிங்கத்தை அடித்துத்தள்ளினர். திரு. ராமானந்த சட்டர்ஜி கூறியதுபோல், அவ்வெற்றி வீரர் அவமானம் பொறுக்க மாட்டாமல் உயிர் நீத்துச் சென்றார்.

இமயமுதல் குமரிவரை லாலாஜியின் அகால அநியாய மரணத்தை எண்ணிக்கொதித்து அல்லற்பட்டுத் தவித்துக் கொண்டிருக்கும்பொழுது இன்னும் சிலதலைவர்கள் லக்ஷ்மணபுரியில் போலீஸாரால் தடிகள்கொண்டு தாக்கப்பட்டதாய்ச் செய்தி கிடைத்திருக்கிறது. இதற்குமுன் சமீபத்தில் தேசத்தின் அரும் பெருந்தலைவர்கள் தடிகளாலும் கழிகளாலும் தாக்கப்பட்டு இழிவுசெய்யப்படவில்லை. நாளுக்குநாள் ஜனங்களிடையே வளர்ந்துவரும் சுதந்திர உணர்ச்சிக்கும், ஒற்றுமைக்கும் அதிகார வர்க்கத்தார் ஒரேபதில்தான் வைத்திருப்பதாய்த் தெரிகிறது.... அது கம்புகளையும் தடிகளையும் கொண்டுதாக்குவது.

லக்ஷ்மணபுரியில் நிகழ்ந்தசம்பவம் பின்வருமாறு. சைமன்கமிஷன் பகிஷ்காரகமிட்டியின் காரியதரிசி சென்ற செவ்வாயன்று அதற்கு மறுநாள் தெருக்களில்ஒருஊர்வலம் நடத்தபோலீஸாருக்கு அனுமதிகேட்டு எழுதியிருந்தார். அனுமதி அளிக்கப்பட்டது. ஆனால் குறிப்பிட்ட சில தெருக்களின் வழியாகவே அவர்கள் செல்ல வேண்டுமென்று குறிப்பிடப் பட்டிருந்தது. ஆனால் காரியதரிசி காலதாமதமாய் விட்டதால் இனிவழியைமாற்றிக்கொள்ளமுடியாதென்றும், அனுமதி கிடைக்காவிட்டாலும் ஊர்வலம் தடுக்கப்பட்ட தெருக்களின் வழியே செல்லுமென்றும் பதிலுரைத்தார். அதன்படியே ஏற்பாடுகளும் நடந்தன. நகர மாஜிஸ்டிரேட் ஊர்வலம் ஆரம்பிக்குமிடத்திற்கு வந்து அதைத்தடுத்திருப்பதாகக் காரியதரிசிக்கு ஒரு கடிதம் அளித்தார். காரியதரிசி சட்டப்படி தாம் உத்திரவுக்கு எழுதி தம் கடமையை முடித்துக் கொண்டதாயும் போலீஸ் அனுமதிகொடுக்காவிட்டால் அதுதமது தவறில்லையென்றும் கூறினார். மேலும் போலீஸார் ஊர்வலத்தை ஒழுங்கு படுத்தவேண்டியதன்றித் தடுக்க நியதியில்லையென்றும் ஊர்வலம் அநீதமான அந்த உத்திரவை மீறிநடக்குமென்றும் கூறினர். ஊர்வலம் ஆரம்பமானதும் மாஜிஸ்டிரேட் போலீஸாரை அதைப் பலாத்காரமாய்த் தடுக்கும்படி உத்திரவு செய்தார். போலீஸாரின் பலாத்காரத்தால் சட்டசபை அங்கத்தினரான திரு மோகன்லால் ஸாக்ஸேனா உள்ளிட்ட பலர் மிகுந்த காயமடைந்தனர். இவை சென்ற புதன்கிழமை நிகழ்ந்தவை.

நவம்பர் 29-உ நகரின் ஒருபுறத்தில் லாலாஜியின் ஞாபகார்த்தமாய் ஒரு பெருங் கூட்டம் கூட்டப்பட்டது. கூட்டம் முடிந்தவுடன் ஜனங்கள் பிரிந்து சிறுசிறு கூட்டமாக மற்றோரிடத்தில் நிகழ்ந்த கூட்டத்திற்குச் சென்றனர். பண்டிதர்கள் ஜவர்லால் நேருவும், கோவிந்த வல்லபபண்டும் மற்றும் சிலருடன் அவ்வாறு சென்றுகொண்டிருந்த பொழுது உதவி போலீஸ் சூபிரெண்டென்டு அவர்களை இடைமறித்து ஜவர்லாவிடம் தாம் ஊர்வலம் நடத்திக் கொண்டிருந்தாரா வென்று வினவினர். சில ஜனங்களுடன் சென்றுகொண்டிருந்த பண்டிதரிடம் இந்தக் கேள்விகேட்க வேண்டிய அவசியம் என்னவென்பது நமக்குப் புலனாகவில்லை. ஒழுங்காக அமைதியுடன் சென்றுகொண்டிருந்தவர்களை இடைநிறுத்தி வீணாக் கேள்வி கேட்கப்பட்டது சமாதானத்தை நிலைநிறுத்தவா அன்றிக் குலைத்துவிடுமா வென்பதைப் போலீஸ் அதிகாரி அறியவில்லைபோலும். பின்னர் பண்டிதர் தாம் ஒரு வக்கீலாததால் தமக்குச்சட்டம் தெரியுமென்று கூறி அதற்குப்பதில் சொல்ல மறுத்துவிட்டார். உடனே போலீஸார் வழிமறித்து நின்றனர். பண்டிதரும் அவர் நண்பர்களும் மீண்டும் நடந்து செல்ல முயற்சித்தனர். போலீஸார் குதிரைவீரர்களை ஏவிவிட்டனர். தலைவர்களும் மற்றவர்களும் தடிகளால் தாக்கப்பட்டனர். சிலருக்குப் பலமானகாயம் ஏற்பட்டிருக்கிறது.

இவற்றிற்கெல்லாம் மேலாகக்கடைசிச் சம்பவம் ஒன்று நிகழ்ந்தது. கமிஷனர்களுக்கு எதிராக பண்டித ஜவர்லால்நேரு மிகவும்பெரிதான ஒரு ஊர்வலக்கூட்டத்தை வைத்துக் கொண்டு நின்றார். அக்கூட்டம் போலீஸார் குறிப்பிட்ட இடத்தில் நிற்க மறுத்துவிட்டது. மறுபடியும் குதிரைவீரர்கள் ஜனங்களைத் தடிகளால் தாக்கினர். பலஜனங்களுக்கு மிகுந்த காயமடைந்திருக்கிறது. இவ்வளவு நெருக்கடியான நிலையிலும் ஜனங்கள் பலாத்காரத்தில் இறங்காமல் அமைதியுடன் நின்றனர். பின்னர் அவர்கள் ஒரு பொதுக்கூட்டம் கூடி மிகவும் அமைதியுடன் கலைந்து சென்றிருப்பதிலிருந்து அவர்களுடைய சாந்தநிலைமை தெளிவாய்த் தெரிகிறது.

மேற்கூறியிருக்கும் விவரத்திலிருந்து தெரியும் விஷயம் யாருக்கும் புலனாகும். போலீஸார் இரண்டு மூன்று சந்தர்ப்பங்களிலும் நடந்து கொண்ட மாதிரியிலிருந்து அவர்கள் அமைதியுண்டாக்குவதில் கொண்டுள்ள சிரத்தை வெளியாகின்றது. சில நண்பர்களோடு திரு ஜவர்லால் சென்றதனால் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியமே அழிந்துபோவதுபோல் பாவித்து போலீஸார் மிருகபலத்தை உபயோகித்திருக்கின்றனர். பண்டிதரையும் அவர் சகாக்களையும் வீணாக இடைமறித்து, அவர்களைக் கழிகளால் அடித்ததற்கு எவ்விதச் சமாதானமும் கூற இடமில்லை. இனி ஏதாவது குழப்பங்கள் நேர்ந்தால் அவற்றிற்குப் போலீஸாரே பொறுப்புள்ளவர்களென்று அவர்கள் மூர்க்கச் செயல்களிலிருந்து தெரிகிறது. நிராயுதபாணியாய் வந்துகொண்டிருந்த சிறு கூட்டத்தாரையும் தலைவர்களையும் தாக்கித் துன்புறுத்தியதில் போலீஸார் தங்கள் மிருகபலத்தை பரீட்சை பார்த்திருக்க வேண்டும், அல்லது பொழுது போக்காகத் திருவிளையாடல் புரிந்திருக்க வேண்டும், அன்றிதாங்களே கண்தலை தெரியாது ஆவேசத்துடன் உண்மையை உணரமுடியாதநிலையை அடைந்திருக்கவேண்டும், அன்றி ஜனங்களிடையே கலவரத்தை யுண்டாக்கத் தூண்டுதல்செய்ய எண்ணியிருக்கவேண்டும். அதிகாரிகள் சைமன்கமிஷனை ஜனங்கள் முற்றிலும்பகிஷ்கரித்து ஒற்றுமைப்பட்டு வருவதைக்கண்டு பீதியடைந்த கலக்கத்தினாலேயே இவ்வாறு அடாதசெயல்கள் புரிந்து தேசத்தை அலங்கோலப்படுத்தி வருவதாய்த் தெரிகிறது. முதலில் லாகூர், இப்பொழுது லக்ஷ்மணபுரி! மற்றவிடங்களிலும் என்னென்ன நடக்குமோ தெரியவில்லை. எங்கு எது நடந்தாலும் பகிஷ்கார இயக்கத்தை இனி நசுக்கிவிட முடியாதென்பது வெள்ளிடைமலை. லாகூர் சம்பவ விசாரணையைப்பற்றியே ஜனங்கள் கண்டித்து வருகின்றனர். இந்திய அரசாங்கத்தார் தற்போது நிகழ்ந்துள்ள கோரசம்பவங்களை உடனே விசாரணை செய்வதற்கும் இம்மாதிரி அதிகாரிகளின் அறிவற்ற அக்கிரமங்கள் நடக்காதிருப்பதற்கும் வேண்டிய ஏற்பாடு செய்வார்களா?

அரசாங்கத்தால் இந்தியர் உயிர் எவ்வளவு கேவலமாக மதிக்கப்படுகிறது என்பதைலாலாஜி அடிபட்டு மரணமடைந்தது நிதர்சனமாகக் காட்டியது. இப்பொழுது ஜவர்லால் தாக்கப்பட்டது அரசாங்க மனப்பான்மையை ஊர்ஜிதப்படுத்துகிறது. வேற்று நாடுகளில், ஏன் இங்கிலாந்தில் லாலாஜியை அடித்ததுபோல் திரு பால்டுவினையோ, மாக்டோனல்டையோ செய்திருந்தால் பிரிட்டிஷாருக்கு எவ்வளவு ஆத்திரமுண்டாகுமென்று பார்லிமெண்டே தேட்டிரர். அடிமை நாட்டிலே அதிகாரத்திலுள்ளவர் யாது செய்யினும் நீதம்! அலைந்து பட்டு ஆற்றாது அழுதகண்ணீர் வீண்போகாது. அதிகாரிகள் இழைக்கும் கொடுமைகளை லாகூரைப் போலவே லக்ஷ்மணபுரியில் கூடியிருந்த ஜனங்களும் பொறுமையுடன் ஏற்றுக்கொண்டு அஹிம்ஸை வழியில் நடந்ததை ஒவ்வொரு இந்தியனும் பின்பற்றி நடக்கவேண்டும். அன்று தாக்கப்பட்டவர்களின் கூட்டம் முப்பதினாயிரத்துக்கு மேலிருந்தும் மன அடக்கத்துடன், பலாத்காரத்திலிறங்காது பிடிவாதத்துடன் நின்றது மிகவும் பாராட்டத்தக்கது.

## இலங்கை இந்தியர் சங்கம்

இரண்டு வாரங்களுக்கு முன்னால் இத்தீவிலுள்ள பல இந்தியசங்கங்களின் பிரதிநிதிகளும் ஒருமகாநாட்டிற்கூடினர். டோனமூர்கமிஷன் இந்தியசமூக சம்பந்தமாகச் செய்துள்ள சிபார்சுகளைப் பரிசிலனை செய்யவும், இந்தியர் அரசியல் நலவுரிமைகளைப் பாதுகாப்பதற்கு ஒரு மத்தியசங்கம் அமைக்கவும் அவர்கள்கூடிஆலோசனை செய்தனர். விஷயங்கள் விவாதிக்கப்பட்டபின்னர் மத்தியசங்கம் ஏற்படுத்தும்விஷயமாக ஆலோசிப்பதற்கு ஒரு ஸப்கமிட்டி நியமிக்கப்பட்டுஊக்கத்துடன் வேலைசெய்து வருகிறது. இலங்கையில் இந்தியர் நலவுரிமைகளைப்பாதுகாத்து விருத்திசெய்வதற்கு ஒரு திறமையுள்ள ஸ்தாபனம் வேண்டுமென்பதைப்பற்றிச் சொல்லாமலே தெரியும். இந்நாட்டில் இந்தியர் முன்னேற்றமடைவதற்குப் பிரதிநிதித்வம்வாய்ந்த ஒரு திறமையுள்ளசங்கம், அச்சங்கத்தின் கொள்கைகளையும் அபிப்பிராயங்களையும் பிரசுரிப்பதற்குத்திறமையுடன் நடத்தப்படும் ஒரு பத்திரிகை, கூடுமான விடங்களிலெல்லாம்ஜனங்கள்ஒன்றுகூடுவதற்கேற்ற சங்கம்—இவை மூன்றும் அவசியம் வேண்டுமென்று நமது நாட்டாருக்கு வற்புறுத்திக் கூறிவருகிறோம். நாம் குறித்துள்ளபடியே ஒருசங்கம் அமைப்பதைப்பற்றி ஆலோசனைசெய்துவரும் கமிட்டியாரை நாம்மிகவும் பாராட்ட வேண்டியது அவசியம். இத்துடன் அவர்களுக்கு ஒரு எச்சரிக்கையும் செய்யவிரும்புகிறோம். அவர்கள் உத்சாகத்தினால் பழைய வற்றையெல்லாம் தள்ளிவிடவேண்டுமென்று நினைத்துவிடக் கூடாது. இலங்கை இந்தியர் சங்கம் எவ்வளவு ஊக்கமாய் வேலைசெய்திருக்கவேண்டுமென்றுநாம்விரும்புவோமோ அவ்வளவுசெய்யவில்லையென்றுபலாகுறைகூறலாம்.ஆனால்இந்தியசமூகசம்பந்தமானஒவ்வொருவிஷயத்திலும் அந்தச்சங்கம் தனது கடமையைச் சரியாகவும் உண்மையாகவும் நிறைவேற்றியிருக்கிறது. நமது சங்கஅங்கத்தினர்களிற் பலர் வர்த்தகம் முதலான பலதுறைகளில் பிரவர்த்தியுடையவர்களாயிருப்பதால், மற்ற சங்கங்களைப்போல மிகுந்த கட்டுப்பாட்டுடனும் சம்பிரதாயத்துடனும் வேலை செய்ய முடியவில்லை. மற்ற சங்கஅங்கத்தினர்கள் அதிக சுதந்திரமும் ஓய்வுமுடையவர்களாயிருப்பார்கள். நமது அங்கத்தினர்களுக்கு வேலைமிகுதி. நமது சங்கத்திற்கு ஒரு சரித்திரமுண்டு. இந்தியஅரசாங்கத்தாருக்குஇங்குள்ள துரைத்தனத்தாருக்கும் நமது சங்கத்தின்பெயர் மிகுந்த பழக்கமாயுள்ளது. ஆதலால் உற்சாகப்பிரியர்கள் சிலர் சங்கத்தின் பழையபெயரைமாற்றிப் புதிதாயொன்றை வைத்து சங்கத்திற்கு அழிவுதேடாதிருக்க வேண்டுமென்று வேண்டுகிறோம். தற்போதுள்ள சங்கஅமைப்புச்சட்டத்தைமுற்றிலும் மாற்றி இலங்கைஇந்தியர் சங்கத்தைமற்ற எல்லாச்சங்கங்களுக்கும் தாய்ச்சபையாகச் செய்யவேண்டும்.

அதன்கிளைகள் ஏற்படுத்தவும், மற்றைச்சங்கங்களை அதன்கிளைகளாக்கிக்கொள்ளவும் வேண்டிய ஏற்பாடு செய்யவேண்டும். இத்தீவிலுள்ள இந்தியமகாஜனங்களில் எல்லாவகுப்பாரும் அதில் சேர்ந்துகொள்ள வேண்டும். பேதபுத்தியில்லாமல் எல்லோரும் உண்மையுடன் பாடுபட்டால் நாம் கூறிய வண்ணம் செய்வதில் கஷ்டமிராது. இப்பொழுதுள்ள சங்கத்தையே அழிக்கப் புதிய பெயருடன் வேறொன்று ஏற்படுத்தாது சங்கத்தின் அமைப்பு முறையைமட்டும் மாற்றிப் பழையபெயருடனிருக்கவேண்டுமென்று கூறுகிறோம். ஏனெனில் ஒருசமூகத்தின் வாழ்வைப்பாதிக்கக் கூடியதாயிருப்பதால் பழமையானபெயரும், புராதனசரித்திரமும் காக்கப்படவேண்டியது அவசியம்.

## இந்தியாவில் சலனப்படக் கைத்தொழில்

சினிமாவுக்கு வேண்டிய சலனப்படங்கள் (film)தயாரிக்கும் கைத்தொழில் இந்தியாவில் மிகுந்தமுன்னேற்றமடைந்துவருகிறது. சிலவருஷகாலத்திற்குள்ளே இந்தியாவிலேயே தோன்றி இந்தியராலேவளர்க்கப்பட்ட இத்தொழில் தற்சமயம் உன்னதமான ஓர் நிலைபெற்றிருக்கிறது. எனினும் வேற்றுநாடுகளில் இத்தொழிலடைந்துள்ள முன்னேற்றத்தைக் கவனித்தால் இந்தியத் தொழில் குழவிப்பருவத்திலிருப்பதாகவே கருதவேண்டும். ஆகவே இதற்கு அரசாங்கத்தார் மிகுந்த உதவிசெய்து வளர்த்துவர வேண்டியது அவசியம். சென்றவருஷம் இந்தியாசட்டசபையில் இத்தொழிலைப்பற்றிவிசாரித்துத் தெரிவிக்க ஒருகமிட்டி நியமிக்கப்பட்டது. கமிட்டியார்மிகுந்தசிரமப்பட்டு ஆங்காங்குசென்றுவிசாரித்து அழகிய ஓர் அறிக்கை வெளியிட்டுள்ளார்கள். ஒவ்வொருநாட்டிலும் சினிமாபடக் கைத்தொழில் ஒவ்வொருவிதமாய்ப்பாதுகாக்கப்பட்டு வருகிறதென்றும், இந்தியத்தொழிலுக்குத் தற்போது அமெரிக்கர் முதலியவெளிநாட்டாரால் மிகுந்த போட்டியின் காரணமாக இடையூறு நேரவிருப்பதால் துரைத்தனத்தார் வேண்டிய தற்காப்புச்சட்டங்கள் செய்து அன்னியர் ஆதிக்கத்தைத்தடுக்க வேண்டுமென்று அக்கமிட்டியார் சிபார்சுசெய்திருக்கின்றனர். செய்யப்பட்டிருக்கும்சிபார்சுகளின்படி அரசாங்கத்தார் நடந்துகொண்டால் இந்தியர் முதல்போட்டு நடத்தும் இத்தொழில் விரைவில் அபிவிருத்தியடையுமென்பதில் ஆட்சேபனையில்லை. இந்தியாவில் 'மதன் தியேட்டர்ஸ் லிமிடெட்' என்னும் கம்பெனியில் தயாரிக்கப்பட்ட ஒரு காட்சிப்படம் இங்கிலாந்தில் விலைக்குவாங்கப்பட்டிருக்கிறது. அக்காட்சி 'துர்கேஷ நந்தினி' என்று வங்காளியில் காலஞ்சென்ற பேர்பெற்ற நாவலாசிரியர் பங்கிமசந்திர சட்டர்ஜியால் எழுதப்பட்ட நவீனத்துள் கடிப்புப் படமாகும். எவ்வளவோ ஆராய்ச்சிசெய்து பார்த்துவாங்கும் ஆங்கிலேயரே இந்தியப்படத்தைவிரும்பி வாங்கியிருப்பதிலிருந்து நமது தொழிலின் மேன்மைநன்குவிளங்குகின்றது. வெளிநாட்டுப் படங்களைவிட, இந்தியாவிலேயே தயாரிக்கப்பட்ட படங்கள்தான் நமக்கு மகிழ்வைக்கொடுத்து உதவக்கூடியதாயிருக்கும். இந்தியப்புராணங்கள், சரித்திரங்களிலிருந்து எடுத்துக்காட்டவேண்டிய காட்சிகள் அனந்தமிருக்கின்றன. இன்னும் பாமரஜனங்களுக்கு அறிவைப்புகட்டுவதற்கும் இளைஞர் கல்விபோதனைக்கும் சலனப்படக்காட்சி மிகவும் பயனளிப்பதாகும். ஆதலால் தேசத்தில் தோன்றி வேரூன்றி வளர்ந்துவரும் இத்தொழிலுக்குப் போட்டியாக வெளிநாட்டார்—முக்கியமாக அமெரிக்கர் இடையூறு விளைக்காமல் தக்கபாதுகாப்புச்செய்து, ஆலோசனை சொல்லி வளர்க்கவேண்டியது இந்திய அரசாங்கத்தார் கடமையாகும்.

## லஜபதிநிதி

காங்கிரஸ் தலைவர் டாக்டர் அன்சாரி, பண்டித மாளவியா, சேத் கியான் ஷியாம் தாஸ்பர்லா ஆகியமூவரும் பொதுஜனங்களுக்கு ஒரு வேண்டுகோள் அனுப்பியிருக்கின்றனர். அதில் காலஞ்சென்ற வீரரின் ஞாபகார்த்தமாக ஐந்துலட்சம் ரூபாய் வசூல் செய்து லஜபதி ஏற்படுத்தியுள்ள 'ஜன ஊழியசங்க'த்தின் வளர்ச்சிக்கும் மற்றும் தக்கமுறையில் அவர்ஞாபகச் சின்னமொன்று நிறுவுவதற்கும் செலவிடப்பட வேண்டுமென்றும் கூறிருக்கின்றனர். இந்நிதிக்கு ஒவ்வொரு இந்தியரும், காலஞ்சென்ற பெரியாரிடம் அனுதாபமுள்ள மறவரும் தத்தம் நிலைமைக் கேற்ப பொருளுதவி செய்யவேண்டுமென்று வேண்டிக் கொள்கிறோம். பணம் அனுப்பவேண்டிய விலாசம்:— சேத் கியான் ஷியாம் தாஸ்பர்ல, 8, ராயல் எக்ஸ் சேஞ்ச்பிளேஸ், கல்கத்தா.

## பாரதியார் பாடல்.

காலஞ்சென்ற பாரதியார் பாடல்களை ஸ்ர். சார்ல்ஸ் இன்ஸ் தலைமை வகித்து நடத்தும் பர்மா அரசாங்கத்தார் அந்நாட்டில் பரவவிடாமல் தடுத்திருப்பதும், அதைப் பின்பற்றிச் சென்னையிலும் பாரதியார் பாடல் புத்தகங்கள் சில பறிமுதல் செய்யப்பட்டிருப்பதும் யாவருக்கும் தெரியும். இது விஷயமாகச் சமீபத்தில் திரு. சத்தியமூர்த்தி சென்னைச் சட்டசபையில் சட்டமெம்பரான திரு. கிருஷ்ண நாயரைச் சில ருசிகரமான கேள்விகள் கேட்டார். அவற்றிற்குப் பதிலளிக்கையில் சட்டமெம்பர், பிரஸ்தாப விஷயத்தில் பர்மா கவர்ன்மெண்டே முதலில் தலையிட்டதாயும், பர்மா அரசாங்கத்தின் ஆலோசனையின் பேரிலேயே சென்னை அரசாங்கம் தலையிட்டதென்றும் கூறினர். சென்னை அரசாங்கத்திற்கு அதுவிஷயத்தில் ஏதாவது அபிப்பிராயமுண்டாவென்று கேட்டதற்குச் சட்ட அங்கத்தினர் 'ஒன்றும் இல்லை'' என்று கூறினார். தாங்கள் சாதகமாயும் பாதகமாயும் எவ்வித சுயமான அபிப்பிராயமும் கொள்ளாது வேறொரு பிற்போக்கான மனப்பான்மையுள்ள கவர்னரால் ஆளப்பட்டுவரும் மாகாணத் துரைத்தனத்தாரின் ஆலோசனைப்படி சென்னைச் சட்ட மெம்பர் நடந்துகொண்டது பரிகாசத்திற்கும், பரிதாபத்திற்கும் இடமாயிருக்கிறது. சீமையிலுள்ள அரசாங்கத்திற்கு இந்தியா அரசாங்கம் கீழ் பட்டது. அதற்குக் கீழ்ப்பட்டது பர்மா அரசாங்கம். அதற்கும் கீழ்ப்பட்டதாயிருக்கிறது சென்னை அரசாங்கம்! 'அடிமைக்கடிமையாக' சென்னைத் துரைத்தனத்தில் திரு. நாயர்போன்ற பணிந்துகொடுக்கும் பான்மை வாய்ந்தவர்கள் சட்ட அங்கத்தினராய்த் திகழ்வதில் ஆச்சரியமில்லை. இந்தியாவின் மானம் எத்தனை வகைகளில் தான் சிதைக்கப்படுகிறது!

## நமது அரசர் பெருமான்.

மேன்மைதங்கிய நமது ஜார்ஜ்மன்னர் சிறிதுகாலமாக தேக அசௌக்கியத்தினால் கஷ்டப்பட்டு வந்து இப்பொழுது குணமடைந்தது வருகிறார். பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்திலுள்ள பல நாட்டாரும் ஜாதிமத பேதமன்னியில் மாட்சிமைதங்கிய அரசருக்கு விரைவில் குணப்பட வேண்டுமென்றும் நீடூழி வாழ்வை அளிக்க வேண்டுமென்றும் இறைவனை வேண்டிப் பிரார்த்தனை செய்து வருகிறார்கள். மன்னரின் தேகநிலை குணப்பட்டு வருவதாகச் செய்திகேட்டு யாவரும் மகிழ்ச்சி கொள்ளுவார்களென்று நம்புகிறோம். தற்போதைய நிலையில் கவலைக்கிடமில்லை. இரவு பகல் எந்நேரத்திலும் அரசமாளிகை வாயிலில் ஏராளமான ஜனங்கள் நற்செய்தி கேட்பதற்காகக் காத்துக் கொண்டேயிருக்கின்றனர்.

## பெரியார் விஜயம்.

தென்னிந்திய திலகரென்று பலரும் போற்றும் அரும் பெருந்தலைவரான டாக்டர் பி. வரதராஜுலு நாயுடு அவர்கள் இம்மாதம் 1[illegible]—ம் உ. கொழும்புக்கு விஜயம் செய்யப்போவது கேட்டு மகிழ்வடைகிறோம். தேசிய வீரரான திரு நாயுடு அன்றுகாலையில் கோட்டை ஸ்டேஷனில் வந்திறங்குகிறார்.

# இந்தியச் செய்திகள்.

கல்கத்தாவிலுள்ள ஐரோப்பிய சங்கத் தலைவர் மிஸ்டர் தாம்ஸன் ஒருபுதியயோசனை கூறியிருக்கிறார். இந்தியாவுக்குச் சுதந்திரம் அளிக்க வேண்டிய நிர்ப்பந்தம்ஏற்பட்டால், "வேறுவழியில்லாமற் போனால், கல்கத்தாவையும் பம்பாயையும் உண்டாக்கியவர் நாமாகையால் அவற்றை அவத்துக்கொண்டு மற்றபாகங்களை இந்தியரிடம் ஒப்புவிக்க வேண்டும்'' என்று அவர்கூறியிருக்கிறார். இந்துதேச சரித்திர ஞானமின்மைக்கும், பிரிட்டிஷாரின் ஆசைக்கும் இதுசிறந்த அத்தாட்சியாக இருப்பதாய் இந்தியப்பத்திரிகைகள் கூறுகின்றன. கேவலம்வியாபார ஆசையால் இப்படிக் கூறப்பட்டிருக்கலாம். பஞ்சாப் படுகொலைநடந்த அமிர்தசரஸ், லாலாஜி தாக்கப்பட்ட லாகூர் முதலிய நகரங்கள் பிரிட்டிஷ் அதிகாரிகளுடைய வீரத்திற்கு அறிகுறியான நகரங்கள். அவற்றை மிஸ்டர் தாம்ஸன் வேண்டுமென்று கூறவில்லை.

0 0 0

விவாக சம்மதவயது மசோதாவைக்குறித்து விசாரணைசெய்யும் கமிட்டியார் சென்னையில் விசாரணையை முடித்துவிட்டார்கள். சென்னையில் அநேகமான அவதிகர்கள் விவாக வயதைக்குறைக்க வேண்டுமென்றும், மிகஇளமையிலேயே சாந்தி நடத்த வேண்டுமென்றும் சாட்சியம் கூறியிருக்கின்றனர்.

0 0 0

திருவல்லிக்கேணி காமாட்சியம்மாள் மரணமடைந்த விஷயமானவழக்கில்ஜட்ஜிரிகன் செய்த முடிவைப்பற்றிச் சென்றவாரம் எழுதினோம். முதல் எதிரிக்கு10— வருடக்கடுங்காவலும், இரண்டாவது எதிரிக்கு ஒருவருடக் கடுங்காவலும் தண்டனை விதிக்கப்பட்டிருக்கிறது. நியாயாதிபதி இத்தகைய கொடூரமான குற்றம் நியாயஸ்தலங்களுக்கு அடிக்கடி வருவதில்லையென்று தமது தீர்ப்பில் கூறியிருக்கிறார். இளமைமணத்தினால் நேரும் இன்னலுக்கு 15— வயதுள்ள மாது தீப்பற்றி மாண்டுபோன இந்தவழக்கு ஓர் உதாரணமாயிருக்கிறது.

0 0 0

பம்பாயில் சைமன் கமிஷன் பகிஷ்காரம் நடந்தசமயம் மாணவர்களைத் தாக்கியதாக ஒரு சார்ஜண்டு குற்றம் சாட்டப்பட்டு மாஜிஸ்டிரேட்டால் ரூபாய் 100—அபராதம் விதிக்கப்பட்டிருக்கிறார்.

0 0 0

'கட்ச்சுதர்சன்' என்னும் கத்தியவார் பத்திரிகையின் ஆசிரியர் பம்பாயில் இரண்டு கோஜா வகுப்புச் சிறுவர்களால் தாக்கப்பட்டுக்காயமடைந்திருக்கிறார். பத்திரிகையில் எழுதப்பட்ட சில கட்டுரைகள் காரணமாகச்சிறுவர் கோபம்கொண்டு தாக்கினராம். ஆசிரியர் சிகிச்சைசெய்யப்பட்டு வருகிறார்.

0 0 0

பண்டித மோதிலால்நேரு லக்ஷ்மணபுரியில்தம்குமாரர் தாக்கப்பட்டதைப்பற்றி பேசியிருப்பதில் அரசாங்கத்தார் ஜனங்களிடையே கலகத்தை உண்டாக்க வேண்டுமென்று முயற்சித்ததாகக்கூறியிருக்கிறார்.

0 0 0

சென்ற மாஸம் 30—உ மத்தியமாகாணமாதர்இரண்டாவது கல்விமகாநாடு நாகபுரியில் மிஸிஸ் பைராம்ஜியின் தலைமையின்கீழ்க்கூடியது. சிறுமிகளுக்குக் கட்டாய இலவசக் கல்வி போதிக்கப்பட வேண்டுமென்றும், பெண்களுக்கு விவாகவயது 16—ம், ஆடவருக்கு 21—மாய் இருக்கவேண்டுமென்றும், அங்கஹீனமான குழந்தைகளுக்கு உதவிசெய்வதற்குத் தக்கமுயற்சிகள் எடுத்துக் கொள்ளவேண்டுமென்றும் பலமுக்கிய தீர்மானங்கள் மகாநாட்டில் நிறைவேறியிருக்கின்றன.

0 0 0

டெய்னிஜெயிலில் கைதிகள்கலகம்செய்ததாகக் குற்றம் சாட்டப்பட்டு விசாரணை நடந்ததில் அலகபாத் கூட்டுசெஷன்ஸ் ஜட்ஜ் தீர்ப்புக்கூறியிருக்கிறார். சென்ற ஜனவரிமாதம் கலகம் நடந்தது; ஜூலைமாதம் விசாரணை ஆரம்பமாயிற்று. 17— பேர்குற்றம்செய்ததாகத் தண்டிக்கப்பட்டிருக்கின்றனர். சிறு குற்றங்களுக்கு 2 வருஷம், 5 வருஷம் காவலும் கொலைக்குற்றத்திற்கு மரண தண்டனையும் அவர்களுக்குவிதிக்கப்பட்டது. டப்லின் என்ற ஒருபடித்த கைதிக்கு ஆயுள்பரியந்தம் தீவாந்திர சிட்சையும் காவலும் விதிக்கப்பட்டது. அவர் தன்னையும் தூக்கில் போடும்படி வேண்டினாராம்.

0 0 0

பம்பாய் முஸ்லீம்லீக்கௌன்ஸில்நேரு கமிட்டி யாதாஸ்த்தை ஒப்புக் கொள்ளாததைப்பற்றி அதன்தலைவர் திரு எம். ஏ. ஜின்னா, அகில இந்திய முஸ்லீம் லீக் சிரத்தையுடன் அந்தயாதாஸ்தைப் பரிசிலனை செய்ய வேண்டுமென்பதற்கே அவ்வாறு தீர்மானிக்கப்பட்டதாயும், நேரு யாதாஸ்த்தில் சிலமாறுதல்கள் செய்ய இடமிருப்பதாயும் ஓர் அறிக்கையில் கூறுகிறார்.

0 0 0

பர்மாவில் நேருயாதாஸ்த்தைப் பரப்புவதற்கு சாதுநித கமிட்டியார் பர்மியபாஷையில் வாரத்திற்கு மூன்று பிரசங்கங்கள் செய்ய வேண்டுமென்று தீர்மானித்திருக்கின்றனர். 'உஹ்லா' என்னும் பத்திரிகை ஷை யாதாஸ்த்தை விபர்மிய பாஷையில் மொழிபெயர்த்து வெளியிட்டிருக்கிறது.

0 0 0

கல்கத்தா மெட்காப் தெருவில் மூன்று செம்மான்கள் தங்கள்தொழிற் சாலையில் வேலைசெய்து கொண்டிருந்தபொழுது திடீரென்று ஒருவெடிகுண்டு வெடித்து அவர்களைக்காயப்படுத்திவிட்டது. வீடுமுழுதும் கந்தகப் புகையாயிருந்ததாம். அவர்களில் ராம்ஜக் என்பவனுக்கு 20—காயங்கள் பட்டிருக்கின்றன.

0 0 0

சென்னை டாக்டர். டி.கே. ராமன் ஜெனரல் ஆஸ்பத்திரியில் அப்துல்கபூர் என்னும் நோயாளிக்கு 'க்ளோரல் ஹைட்ரேட்' மருந்தை அதிகமாய்க் கொடுத்து அவர்மரணத்திற்குக் காரணமாயிருந்ததாகத் தொடரப்பட்ட வழக்கில் இம்மாதம் 1—ம் தேதி எக்மோர் போலீஸ் கோர்ட்டில் மிஸ்டர் அப்பாஸ் ஆலிகான் தீர்ப்புக்கூறி ஷை டாக்டரைவிடுதலை செய்து விட்டார்

0 0 0

லாகூரில் நடந்த போலீஸ் ராஜ்யத்தில் அக்டோபர் 20—உ லாலாலஜபதிராய் முதலியதலைவர்கள் தாக்கப்பட்டதில்உத்தியோகப் பற்றில்லாத சட்டசபை அங்கத்தினர்களைக் கொண்டு ஒரு கமிட்டிநியமித்து போலீஸ்சூபிரண்டெண்டானமிஸ்டர்ஸ்காட் உள்ளிட்ட உத்தியோகஸ்தர்களின் நடத்தையைப்பற்றி விசாரிக்க வேண்டுமென்று டாக்டர் ஆலம் பஞ்சாப் சட்டசபையில் சென்ற 30—ம் உ ஓர்தீர்மானம் கொணர்ந்திருக்கிறார். அதைப்பற்றி அவர் பேசுகையில், "இந்தச்சம்பவம் இந்த அரசாங்கசரித்திரத்தின் கடைசி அத்தியாயத்தில் மிக முக்கியமான அவதாரமாக நிற்கும்'' என்று கூறினார். லாலாஜியைக்கழுத்துப்புறத்தில் சட்டையைப் பிடித்துக் கொண்டு ஒரு ஐரோப்பியன் கையிலிருந்த தடியால்மார்பில் அடித்ததைத்தான் நேரில்கண்டதாய் டாக்டர் ஆலம் கூறியிருக்கிறார்.

0 0 0

தற்போது மதுரையில் விசாரித்துவரும் 'சம்மத வயதுகமிட்டி'க்கு அந்நகரத்து மாதரில் 595 பேர் விவாகவயதை அதிகமாக்குவதற்காக வந்துள்ள சட்டத்தை ஆதரிப்பதாகத் தெரிவித்திருக்கின்றனர்.

0 0 0

காங்கிரஸ் அக்கிராசனரான பண்டிதமோதிலால்நேரு இம்மாதம் 21—உகல்கத்தாவுக்கு விஜயஞ்செய்யும் பொழுது 28 குதிரைகள் பூட்டியரதத்தில் 2,000தொண்டர்கள் புடைசூழ ஊர்வலமாய் அழைத்துச் செல்வதற்கு காங்கிரஸ் வரவேற்புக் கமிட்டியார் ஏற்பாடு செய்திருக்கின்றனர்.

டிஸம்பர் 20—க்குமேல் மகாத்மா காந்தி ஒரிஸா மாகாணத்தில் சம்பல்பூர் ஜில்லாவுக்கு விஜயஞ் செய்வாரென்று தெரிகிறது.

## லேவாதேவிக்காரரும் சிபார்சு செய்யப்பட்டிருக்கும் நிபந்தனைகளும்

முந்திய இதழில் லேவாதேவிக்காரருக்கு நிபந்தனைகள் ஏற்படுத்த வேண்டுமென்ற ஆலோசனை கூறியுள்ள கமிட்டியின் அங்கத்தினர்களைப் பற்றிஎழுதினோம். இப்பொழுது மற்றும் சிலவிஷயங்களைக் கவனிப்போம். முதலில் லேவாதேவிக்காரரைப்பாதிக்கக்கூடிய விஷயங்களைப்பற்றி ஆலோசித்த இந்தக்கமிட்டியில் அவர்கள்பிரதிநிதிகள் சேர்ந்திருக்க வேண்டியது அவசியமல்லவா? லேவாதேவிக்காரருடைய பிரதிநிதிகளும் கமிட்டியில் இடம்பெற்றிருந்தால் கமிட்டியின் விவாதங்களில் கலந்துகொண்டு தங்கள் நிலைமையையும் விளக்கமாக எடுத்துரைக்கச் சந்தர்ப்பம் ஏற்பட்டிருக்கும். இப்பொழுது செய்யப்பட்டிருக்கும் முடிவுகள் எதிர்கட்சியாருக்குத் தகவலின்றி ஒருதலைப்பக்கமாக ஆலோசித்துச் செய்யப்பட்டவையாயிருக்கின்றன. சமூகத்தின்வாழ்விற்கு மிகமுக்கியமான லேவாதேவியைப்பற்றிய இந்தப்பிரச்னையில் அதில் பழக்க முள்ளவர்களுடைய அபிப்பிராயங்கள் கேட்கப்படாமற் போனது வருந்தத்தக்க விஷயமாகும்.

0 0 0

ஒரு சமூகம் செழிப்பாயிருப்பதற்கும் வளர்ச்சிபெறுவதற்கும் பொருளும், கொடுக்கல் வாங்கலும் மிக மிக அவசியமென்பது எமது அபிப்பிராயம். லேவாதேவிசெய்து அதனாலேற்படும் வசையை ஏற்றுக்கொள்ள முற்காலத்தில் தனியாக ஒரு வகுப்பார் இருந்தனர். ஐரோப்பாவில்யூதரும், இந்திய செட்டிமாரும், சௌகார்களும்இதனால்லேவாதேவி செய்து எப்படியாவது பணம் சம்பாதிப்பவர்கள் என்றுபெயர் பெற்றனர். லேவாதேவி செய்வதேபாவமென்று ஓர்காலத்தில் எண்ணப்பட்டு வந்தது. லேவாதேவி செய்து பெரும்பணம் சம்பாதிப்பது குற்றமென்று சில மதத்தினர் தடுத்துக்கூறினர். இத்தகைய பழங்கொள்கைகள் மறைந்து, கைத்தொழிலும் முன்னேற்றமும்பெருகிவரும்இக்காலத்தில்பணத்தின் அவசியத்தையும் பெருமையையும் உணர்ந்து வருகிறோம். தற்கால மனிதனுக்கு, செல்வம்தான் வாங்கக்கூடிய பொருள்களின் அளவைக் குறிக்கும்சக்தியின் அடையாளமாக இருக்கிறது. பணம் மற்றைச் செல்வத்திற்கும் இன்பத்திற்கும் சாதனமாயிருக்கிறது. நவீன உலகத்தில் பணம் பலதொழில்களைச் செய்து பொருளை உற்பத்திசெய்யச் சாதனமாயிருந்து வருகிறது. பிரஸ்தாபகமிட்டியார் பணத்தின் இந்தமுக்கிய அம்சத்தையும், தொழிற் பெருக்கால் ஏற்படும் தேசத்தின் செல்வத்தையும்உணராதது முதற் பிழையாகும்.

0 0 0

லேவாதேவிக்காரர் சட்டம் 1918—ஆகஸ்டு மாதம் ஏற்பட்ட போதிலும் சென்ற பத்துவருஷகாலமாய் நடந்துவரும்அதன்அமூலினால் லேவாதேவிக்காரர்போதியஅளவு பாதிக்கப்படவில்லையென்று பிரஸ்தாப கமிட்டியார் சிபார்சுகளின் முகப்பிலே கூறுகிறார்கள். இதிலிருந்து கமிட்டியாருடைய முக்கியநோக்கம் லேவாதேவிக்காரரைப் போதியஅளவு பாதிக்கக்கூடிய முறைகளையும் வழிகளையும் கண்டுபிடிக்க வேண்டுமென்பதே என்றுதெரிகிறது. இலங்கையிலுள்ள லேவாதேவிக்காரரோ பெரும்பாலாக இந்தியர்களே. அதிலும் இந்தியர்க்கு விரோதமான உணர்ச்சியும், அவர்களுக்கு வாக்குரிமைகூட கொடுக்கக்கூடாதென்று தடுக்கும் மனப்பான்மையும் மிகுந்திருக்கும் இவ்வேளையில் இக்கமிட்டியார் லேவாதேவிக்காரர்களைப் போதியஅளவு பாதிக்கக்கூடிய சட்டமியற்ற ஆலோசனை கூற முன்வந்தது வருந்தத்தக்கதே. இதனால் பாதிக்கப்பட்டு வருபவர்கள் இந்தியர்கள், அதிலும் முக்கியமாய் நகரத்தார் என்று நாம் முன்னமேயே குறிப்பிட்டிருக்கிறோம்.

0 0 0

ஆகவே இந்தப்பிரச்னை இந்தியர்கள், அதிலும் லேவாதேவிக் காரராயிருப்பதால் நம் சகோதரர்களை ஊன்றிக்கவனிக்கும்படி வேண்டுகிறோம். கமிட்டி புதிதாய் ஏற்படுத்தவேண்டுமென்று கூறும் பந்தங்களை--

(6-ம் பக்கம் பார்க்க)

(5-ம் பக்கத்தொடர்ச்சி)
லேவாதேவிக்காரரும்
வெளிசெய்யப்பட்டிருக்கும்நிபந்தனைகளும்

விலக்குகளை ஆராய்ந்து பார்த்தல் அவசியம். இலங்கையில் வர்த்தக விருத்திக்கும், கைத்தொழிற் பெருக்கத்திற்கும் உதவியான காரணமாயிருந்த லேவாதேவி இப்பொழுது பாதிக்கப்படப்போவதை முன் கூட்டி உய்த்துணர வேண்டும்.

0 0 0

கமிட்டியார் முதலில் தற்போதுள்ள லேவாதேவிச் சட்டத்தால் கட்டுப்படுத்தக்கூடிய சில பிரிவுகள் இருந்தபோதிலும், அதில் ஏற்படும் குறைகளை நிவர்த்திப்பதற்கு இன்னும் சில வழிகளில் திருத்தியமைக்க வேண்டுமென்று அபிப்பிராயப் படுகின்றனர். இவ்வாறு இருக்கும் குறைகளை நீக்கி அதிகமாய்ப் பாதிக்கக்கூடிய புதிய பிரிவுகளைக் கண்டுபிடிக்கவேண்டுமென்ற காரியத்தில் இறங்கியிருக்கின்றனர். தற்போதுள்ள சட்டத்தின் பல பிரிவுகளையும் பரிசீலனை செய்து அவற்றின் குணதோஷங்களைப் பற்றிக் கமிட்டியார் அபிப்பிராயம் கூறியிருக்கின்றனர். 2, 3-வது பிரிவுகள் திருத்தப்படவேண்டிய அவசியமில்லையென்று அவர்கள் கூறிவிட்டார்கள். அந்தப் பிரிவுகளின் சுருக்கம் வருமாறு:— இரண்டாவது பிரிவு மூன்றுவகையான லேவாதேவியைப்பற்றிக் குறிக்கின்றது. முதலாவது வகை வட்டியின் மூலமாயோ மற்றவழியிலோ நீதிஸ்தலத்தார் அபிப்பிராயத்தில் மிக அதிகமென்று கருதப்படும் தொகை கடன்காரர் தமக்கு வரவேண்டுமென்று கேட்பது; கடுமையான அதிகத் தொகை செலுத்தவேண்டியிருக்கும் விவகாரங்கள் இரண்டு கட்சியாருக்கும் ஏற்பட்ட நீதியற்ற ஒப்பந்தம் முதலியவை சம்பந்தமானது இரண்டாவது அநீதியான பலவந்தத்தினால் ஏற்பட்டு நீதிஸ்தலத்தில் சட்டத்தின் மூலமாய் நிவாரணம் செய்யத்தக்க ஒப்பந்த விஷயங்கள் சம்பந்தமானது; மூன்றாவது வகை கடன்கொடுப்பவர் பிராமிஸரி நோட்டில் தனக்கு வரவேண்டிய தொகை கட்டுமானமாயிருப்பது, அல்லது தொகையை எழுதாமல் இடம்விட்டிருப்பது முதலிய விஷயங்கள் சம்பந்தமானது. இம்மாதிரி வியாச்சியங்களில் கோர்ட்டார் விவகாரத்தை அடியிலிருந்து விசாரித்து கடன்கொடுத்தவர் வாங்கியவர் இருவர் கணக்கையும் கவனித்து, வழக்குத்தொடரப்பட்டிருக்கும் பிரதிவாதி இயற்கையாயுள்ளதற்கு அதிகமாய்க் கொடுக்கவேண்டிய பாரத்தை நீக்கி, உண்மையாயுள்ள அசல்வட்டி மற்றசெலவுகள் முதலியவற்றைச் செலுத்த வேண்டுமென்று தீர்ப்புச் செய்வதற்கு இந்தச்சட்டம் சந்தர்ப்பமளிக்கிறது. மூன்றாவது பிரிவுகோர்ட்டாருக்கு அதிக அதிகாரம் கொடுப்பதோடு இச்சட்டத்தின்கீழ்நிவாரணம்கேட்கப்படும் விஷயங்களில் அநுபவஉரிமைச்சட்டம் எவ்விதமாயும் பாதிக்காதென்று கூறப்பட்டிருக்கிறது. ஆகவே லேவாதேவிக்காரருடைய பேராசைகாரணமாக இடுக்கண் அநுபவிக்கும் நபர்களுக்குக் கோர்ட்டார் வேண்டிய உதவிசெய்து காப்பாற்றுவதற்குப் போதிய அதிகாரமும் சுதந்திரமும்தற்போதையச்சட்டத்தின் மூலமாயே கிடைத்திருக்கிறது. இதைநாம் முதற்கண் ஞாபகத்தில் வைத்துக் கொள்ளவேண்டும். இச்சட்டத்தைவிட அதிகமான அதிகாரத்தைக் கோர்ட்டாருக்கு அளித்தலியலாதென்பதையும், இவ்வளவு கடுமையான நிபந்தனைகளை யுடைய சட்டத்தையும் மீறி கடன்கொடுப்பவர்களும் வாங்குபவர்களும் அதிக்ரமித்து நடந்து வருகிறார்களென்றால் கமிட்டியார் புதிதாய்ச் செய்யவேண்டுமென்று கூறும் மாறுதல்களாலும் ஒன்றும் செய்யமுடியாதென்பதையும் வேறு கட்டுரைகளில் பின்னர் விளக்குவோம்.

பதுல்லா, சில்வா ஜில்லாக்களில் மிகுந்த மழைபெய்திருப்பதால் ரயில்பாதைகளில் வண்டிகள் மிகமெதுவாகவரவேண்டியிருப்பதால் காலதாமதமாய் வருகின்றன. சிற்சிலவிடங்களில் வேண்டிய மராமத்துக்கள் செய்யப்பட்டு வருகின்றன.

# இலங்கைச் செய்திகள்

## கொழும்பில் தொழிலாளர் குழப்பம்

நேற்று செவ்வாய்க்கிழமை காலையில் பெட்டாவில் நடந்தஒருகலகத்தில் பத்துப்பேர் அரெஸ்டு செய்யப்பட்டும், நான்கு காயமடைந்தவர்கள் வைத்தியசாலைக்கு அனுப்பப்பட்டு மிருக்கிறார்கள். கலகம் இலங்கைத்தொழிலாளர் சங்க அங்கத்தினருக்கும் அதிலிருந்து சமீபத்தில்பிரிந்துபோன இந்தியத்தொழிலாளருக்கும் ஏற்பட்டது. துறைமுகத்தில் தொழிலாளரைவேலைக்கு வைத்துக்கொள்ளுவதில் செய்யப்பட்ட வித்தியாசமேகலகத்திற்குக்காரணமென்று சொல்லப்படுகிறது. நேற்றைக்குழப்பத்தை அடக்குவதில் கோட்டை, பெட்டா இரண்டுபோலீஸார்களும் உடனே முயற்சிசெய்திராவிடில் மிகுந்தசேதம் ஏற்பட்டிருக்கும். முதலில் கோட்டை போலீஸார்க்குக் கலகத்தைப் பற்றித் தெரிவித்தவன் இஸ்மெயில் என்பவன். அவன் முதுகில் ஒரு கத்திக்காயமிருந்தது. சப்இன்ஸ்பெக்டரும் தாணைக்காரரும்சென்றுபார்க்கையில் காயன்பிள்ளை என்பவர் தலையில் காயப்பட்டுக் கீழே ஸ்தாவில்கிடந்தார். இதுநடந்து ஒரு மணிநேரத்திற்குப்பின்பு மறுபடி கெய்ஸர்தெருவிலும் இரண்டாம் குறுக்குத் தெருவிலும் கலகம் நடந்தது. கற்களெறியப்பட்டதால்பலகடைகளிலுள்ளசாமான்கள்உடைந்துசேதமாயின. இன்ஸ்பெக்டர் குணதிலக ஏழுபேரை அரெஸ்டுசெய்தார்.

0 0 0

## கிணறுவெட்டப் பூதம் புறப்பட்டது

கொழும்பு ஜில்லாகோர்ட்டில் மிஸ்டர் வி. எம். பெர்னண்டோ, ஜில்லா ஜட்ஜ் முன்பாக சென்ற 3-ம் வ. திரு. பி. ஆர். எம். பழனியப்ப செட்டியார் (செட்டித்தெரு) சட்டசபையில் இந்தியர்பிரதிநிதியான கௌரவ. நடேசய்யர் தமக்கு 1928, ஜனவரி 13-ம் வ. எழுதிக்கொடுத்த பிராமிஸரிநோட்டின்படி அசலும் வட்டியுமாக ரூ 1,138-50 செலுத்தவேண்டியிருப்பதாக வழக்குத்தொடுத்திருக்கிறார். பிரதிவாதி நோட்டுஎழுதிக்கொடுத்ததை ஒப்புக்கொண்டு, தாம் எழுதிய புஸ்தகமொன்று அச்சிடப்பட்டதில் விற்றுவரும் லாபத்தில் 5-ல் 2 பாகம் தமக்குக்கொடுப்பதாய் வாதி சென்ற மார்ச்மாத முடிவில் ஒப்புக்கொண்டிருப்பதாயும், புஸ்தகங்களை விற்றுத்தமக்கு உரியபாகத்தைக் கொடுப்பதாய்ச் சொல்லியிருப்பதாயும் கூறினார். 50,000 பிரதிகள் அடிக்கப்பட்டதில், வாதி 10,000 விற்றதுபோக 40,000 வைத்திருப்பதாயும், பாக்கியுள்ளதையும் விற்றபின்பே வாதி வழக்கிடலாமென்றும் பிரதிவாதி தாவா சொல்லியிருக்கிறார். வாதிக்கு மிஸ்டர். சி. நாகலிங்கமும் பிரதிவாதிக்கு மிஸ்டர். எம். என். எம். ஸலாஉத்தீனும் ஆஜராயிருந்தார்கள். பெப்ருவரி 11-ம் வக்கு வழக்கு ஒத்திவைக்கப்பட்டிருக்கிறது. வழக்கில் பிரஸ்தாபிக்கப்பட்டுள்ள புஸ்தகங்கள், நாம் விசாரித்ததில், 'இந்தியத்தொழிலாளரின் உரிமைகளும்கடமைகளும்' என்று தெரிகிறது. தொழிலாளருக்கு உபதேசம் செய்யப்புகுந்ததில் ஆசிரியருக்கே இடுக்கண்விளைந்தது விசனகரமானது.

## வெறிபிடித்தநாய்கள்

கோட்டிபிடித்துச்சொந்தக்காரரில்லாமல் திரியும் நாய்களால் இலங்கையில் மிகுந்தசேதம் விளைந்துவருகிறது. அந்நாய்களின் விஷத்தினால் கஷ்டப்படுபவர்கள் நாளுக்குநாள் பெருகிவருகிறார்கள். 1928-ம் வருமுதல் 9-மாதங்களில் நாய்க்கடி விஷத்தினால் வருந்தி பேஸ்டியர் வைத்தியாலயத்தில் சிகிச்சை செய்யப்பட்டவர்களின்தொகை அதற்குமுந்தியஜந்துவருஷங்களில்அதேயளவுகாலத்தில் சிகிச்சைசெய்யப்பட்டிருப்பவர்களின் தொகையைக் காட்டிலும் மிக மிக அதிகமாயிருக்கிறது. இதனால் அரசாங்கத்தார்வெறிபிடித்தநாய்களைத் தடுக்க ஏற்படுத்தப்பட்ட சட்டத்தைத் தீவிரமான அமுலுக்குக்கொண்டுவரப் போவதாய்த்தெரிகிறது. 1924-ல் முதல்முக்கால் வருஷத்தில் ஏற்பட்டதொகையினைவிட 1928—முதல் முக்கால் வருஷத்தில் நாய்விஷத்திற்கு சிகிச்சை செய்யப்பட்டவர்கள் 100 க்கு 320 அதிகமாயிருக்கின்றனர். எவ்வளவு நாய்கள் அடிக்கப்பட்டாலும்அதிகமானநாய்கள் தோன்றிவருகின்றன. அனேக ஜனங்கள் நாய்க்குட்டிகளைச் சிறிது காலம்வளர்த்துவிட்டு வெளியில் திரிய விட்டுவிடுவதால்தான் இப்படி ஏற்படுகிறது.

பேஸ்டியர் இன்ஸ்டிடியூட்டில் சிகிச்சை செய்யப்பட்டவர்களின்தொகை.

| | |
|---|---|
| 1924 | 298 |
| 1925 | 382 |
| 1926 | 718 |
| 1927 | 770 |
| 1928 | 952 |

0 0 0

## இலங்கையர்குற்றங்கள்.

இலங்கைத்தீவில் 1928—ம் வரு முதல் 9— மாதத்தில் நிகழ்ந்த குற்றங்களைப்பற்றி அறிக்கை வெளியிடப்பட்டிருக்கிறது. இதையும் சென்றஆண்டு அதேயளவுகாலத்தில் நடந்த குற்றங்களின் கணக்கையும் ஒத்திட்டுப்பார்த்தால்புதியவருஷத்தில் சொத்துவிஷயமான குற்றங்கள் குறைந்திருப்பதாயும், சரீரசம்பந்தமான கொலை முதலிய குற்றங்கள் அதிகமாய்ப் பெருகியிருப்பதாயும் தெரிகிறது. முந்திய காலத்தைவிட சொத்து விஷயமான குற்றங்களில் 158 குறைந்திருக்கின்றன; சரீரசம்பந்தமானகுற்றங்கள் 299— அதிகரித்திருக்கின்றன. வெட்டுக்குத்துக்கள் நடப்பதிலபல முன்கூட்டி ஆலோசிக்கப்படாமல் திடீரென்று அற்பகாரணத்தாலேயே ஏற்பட்டு விடுகின்றன. ஒருவன் தன்மனைவி வேளைக்குப் போஜனம் போடாததற்காக் குத்திவிட்டானும்! மற்றொருவன் தன் நண்பன்சீட்டு விளையாட வரமாட்டே னென்றதற்காகக் குத்திவிட்டானும்! இதுபோன்ற அற்பகாரணங்களால் இரத்தம் சிந்தப்பட்டு விடுகிறது. போலீஸார் களவுமுதலிய பொருள் சம்பந்தமான குற்றங்களைச் செய்ய விடாமல் தடுப்பதற்கும் விசாரித்தறிவதற்கும் பல புதிய முன்னேற்பாடுகள் செய்து தீவிரமாய் உழைத்து வருவதால் அத்தகைய குற்றங்கள் குறைந்துவருகின்றன. ஆனால் சரீர ஹிம்சையைத் தடுப்பது அவர்களுக்குள்ளதாயில்லை. ஏனெனில் முன் காரணமின்றி, பரஸ்பர விரோதமின்றி திடீரென்று சொற்பகாரணத்தாலே அனேக வெட்டுப்பழிகள் நடக்கின்றன. இவை அதிகமாய்க் கிராமாந்திரங்களில் நடைபெறுகின்றன. இந்நிலைமையை நிவர்த்திப்பதற்கு ஜனங்களிடையே அதிகக் கல்வியைப் பரப்புவதும், ஒழிவு நேரத்தைச் சோம்பலில் கழிக்காதபடி தொழில்களும் விளையாட்டுக்களும் நடத்த ஏற்பாடு செய்வதும், வாலிபச்சாரணர் இயக்கத்தைக்கிராமாந்தரங்களில் அதிகமாய்ப் பரப்பி ஜனங்களுக்கு உதவிசெய்து பொதுவாழ்விற்கு வேண்டிய கல்லறிவைப் புகட்டுவதும் உடனே செய்யப்படவேண்டிய வேலைகள். மற்ற வழிகளில் பாமர ஜனங்களின் மனப்பான்மையை ஒரே நாளில் குணப்படுத்தி நல்வழிப் படுத்தமுடியாது.



உயர்ந்த சென்ட்கள்
பிரசித்திபெற்ற
காமினியா தைலம்
ஒட்டோ டில்பகார
முதலிய எல்லா வாசனைத் திரவியங்களும், சோப்புகளும் விலை சகாயமாய்க் கிடைக்கும்.



கார்னிக் எக்யூ மிக்சர் என்ற காச்சல் மருந்தும், உயர்ந்த டுவைன் திணுசுகளும் எம்மிடம் ஏராளமாய்க்கிடைக்கும்.
இலங்கைசோல் ஏஜண்டு:-
கிருஷ்ணலால் அன்கோ.,
178, வீ ஸ்டிரீட்,
கொழும்பு.



"ஆர்கையில்"
துவிசக்கிர (சைக்கிள்) வண்டிகள்



இலங்கையில் மிக குறைந்த விலைரூபாய் 85-00
சிறு தொகை பணம் கட்டி சைக்கிள்கள் வாங்குவதற்கான ஏற்பாடுகள் செய்கிறோம்.
HOARE
& CO (ENGINEERS) LTD
தபால் பெட்டி நெ. 22
கொழும்பு.
ஆர்டர் கொடுப்பவர்கள் இப்பத்திரிகையை குறிக்கவும்.




லயன் பவுடர்
எப்போதும் டாகட்டர் ட்ராலியின் சிங்க மார்க் டாயலட் பவுடரையே உபயோகிப்பதினால் தேமல்கள, புண்கள், முகப்பருக்கள் முதலியன நீங்குகிறதுமல்லாமல் தோல் சம்பந்தமான எவ்வித வியாதிகளும் அணுகாமல் பாதுகாக்கப்படுகிறது. அது முகத்தின் வசீகரத்தையும் அழகையும் அதிகரிக்கச் செய்கின்றது.




அது தோலுக்குக் கெடுதி யொன்றும் செய்யாது. குழந்தைகளுக்கு மிகவும் நல்லதென அங்கீகாரம் பெற்றது.
எல்லாவிடங்களிலும் கிடைக்கும்.
A. V. R. A. Adycappa Chetty
COLOMBO.
(C.I. 2.)

Ford

புதிய டூரிங் கார்



உங்களுடையது

ரொக்கம் ரூபாய் 2450

அல்லது

முதலில் காரைப் பெற்றுக்கொள்ளும்பொழுது (இன்ஷூரென்ஸ தொகை தவிர) ரூபாய் 800-ம் செலுத்தி மீதி தொகையை மாதம் ஒன்றுக்கு ரூபாய் 164 வீதம் 11 மாதமாகவும் செலுத்த வேண்டும்.

உங்கள் பக்கத்திலுள்ள போர்ட் வியாபாரிக்காவது ஸிலோன் டிஸ்ட்ரிப்யூட்டர்களுக்காவது எழுதி விவரங்கள் தெரிந்து கொள்ளவும்.

பியேர்ஸ், லெஸ்லி அண்ட் கொம்பனி,
பெயர்பீல்ட் ஹவுஸ், யூனியன் பிளேஸ்
கொழும்பு.

கோல்கேட் ஆக்ட்டகன் சோப்

மிகவும் உபயோகமானது.




உலகப் பிரசித்திபெற்ற
ஆக்ட்டகன் சோப்

வஸ்திரங்கள் சுத்திசெய்வதற்கும் மற்றும் வீட்டில் எப்பொழுதும் உபயோகிப்பதற்கும் மிகவும் அருமையானது.

ஆக்ட்டகன் சோப்

எந்த ஜலத்திலும் உபயோகிக்க கூடியது. மிக மெல்லிய வஸ்திரங்களுக்கும் யாதொரு கெடுதியும்செய்யாதுஎந்த அழுக்கையும் மிக சுலபமாகப் போக்கக்கூடியது.

மூன்று சிகப்புப்பட்டைகளுள்ள காகிதத்தில் சுத்தியிருக்கும் ஆக்ட்டகன்சோப்பைக்கவனித்துவாங்குங்கள்.

அக்காகிதங்களை கவனமாய் சேர்த்து வையுங்கள். அவைக்குப் பதிலாக தக்க பரிசுகள் கிடைக்கும்.

விலையுயர்ந்த பரிசுவிபரங்கள் அடங்கிய நேர்த்தியான கேட்லாக் கேட்போருக்கு இனமாக அனுப்பப்படும்

ஆக்ட்டகன்கூப்பன்களை சேர்த்து வையுங்கள்.

சோல் ஏஜண்டுகள் :

A. V. R. A. Adycappa Chetty,
15, Sea Street, COLOMBO.

A. M. Othuman Pillai,
24, Keyser Street, COLOMBO

எல்லா தாய்மார்களுக்கும் சிறந்த புத்திமதி இதுவே

நீங்கள்பிரசவித்த பின் பலமற்றவர்களாகவும், பலத்தை இழந்தவர்களாகவும் தோன்றினல் ஏமாந்தவரைப் போல இராதீர்கள். நீஙகள் இழந்த பலத்தையும், தேக வலிமையையும் மறு முறையும் நீங்கள் நிச்சயமாய் அடையலாம் இதற்குக் கைகண்டது "ஹக்கோஸன்" ஒன்றே மற்றவைகளினுல் யாதொரு பிரயோஜனமும் ஏற்படாது.

தேகத்திற்கு உற்சாகத்தையும் சுறு சுறுப்பையும் கொடுக்கக் கூடியது இந்த டானிக் ஒன்றே. இச்சிறந்த டானிக் ஜீரணசக்தியை அதிகப்படுத்தி ரத்தத்தைச் சுத்திசெய்கிறது.

பல பிரமிக வைத்தியர்களால் இது மிகவும் மேலானதெனச் சிபார்சு செய்யப் பட்டிருக்கிறது.




எல்லா மருந்து வியாபாரிகளிடமும் கிடைக்கும்.

## இந்தியர்களே! சற்றுகவனியுங்கள்!

——oo——

**'இலங்கை இந்தியன் பத்திரிகைக்கு நீங்கள் ஏன் சந்தாதாரராக சேர வேண்டும்? என்பதற்கு காரணங்கள் ஆறுஉள. அவை:—**

1. இலங்கையில் இந்தியர்களுக்காக ஊக்கத்துடன் உழைக்கும் தமிழ்பத்திரிகை இது ஒன்றே.

2. இப்பத்திரிகை நடத்துவதில் உடமஸ்தருக்கு ஏற்படும் தியாகத்தையும் பணநஷ்டத்தையும் பொருள் படுத்தாது இந்தியரின் நலத்தையே முக்கிய நோக்கமாக கருதி இப்பத்திரிகை பாடுபட்டு வருகிறது.

3. இப்பத்திரிகையின் அபிப்பிராயங்கள் இந்தியா கவர்மென்டாலும் இலங்கை கவர்மென்டாலும் நன்குமதிக்கப்படுகின்றன.

4. இப்பத்திரிகையானது இத்தீவிலுள்ள இந்தியரின் மனோபாவத்தையும் அவரது அபிப்பிராயங்களையும் உள்ளவாறே விளக்கி காட்டுகின்றது.

5. பத்திரிகை பிரசுரிப்பதில் ஏற்படும் செலவுக்குமட்டும் போதுமானபடி பத்திரிகையின் சந்தா மிககுறைவாகவே ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. ஆகையால் சிறிதும் தாமதமின்றி, இத்துடன் சேர்த்திருக்கும் பாரத்தை பூர்த்திசெய்து எங்களுக்கு உடனே அனுப்புங்கள்!

6. இப்பத்திரிகையை ஓர் பிழைக்கும் வழியாகக் கருதி இதன் சொந்தக்காரர் நடத்திவரவில்லை. அவர் தன் செலவுகளை நிர்வகிக்கும் பொருட்டு இதனை நடத்தவுமில்லை. தனக்கேற் பட்டுள்ள சொந்தத் தொழிலில் அரும்பாடுபட்டுச் சேர்க்கும் பொருளையே அதன் மூலதனமாக வைத்து அதனை நடத்திவருகிறார். தனது தொழிலில் ஈடுபட்டு சுலபமாக பணத்தைத் தேடுவதற்குரிய நேரத்தையும் அதற்காகவே தியாகம் செய்துவருகிறார்.

சந்தாதாரராக சேருவோர் தயவுசெய்து கீழ்க்கண்ட துண்டைப் பூர்த்திசெய்து அனுப்புங்கள்.
"இலங்கை இந்தியன்" மனேஜாவர்களுக்கு,
107,B, ஹல்ஸ்டாப் தெரு, கொழும்பு.

சந்தா விபரம்-

——o——

| | | |
|---|---|---|
| இந்தியா இலங்கை முதலிய இடங்களுக்கு | வருட சந்தா | ரூ. 5-00. |
| | 6 மாதச் சந்தா | ,, 3-00. |
| வெளி நாடுகளுக்கு | வருட சந்தா | ரூ. 6-00. |
| | 6 மாதச் சந்தா | ,, 3-50. |

ஐயா,

அடியிற் கையொப்பமிட்ட என்னைத் தங்களுடைய "இலங்கை இந்தியன்" தமிழ் வாரப் பத்திரிகைக்கு ஒரு வருட / 6 மாத சந்தாதாரராகச் சேர்த்துக் கொள்ளுங்கள்.

ஒப்பம்..............................

பெயர்..............................

விலாசம்..............................

..............................

குறிப்பு:- தயவுசெய்து பெயரையும், விலாசத்தையும், தெளிவாக எழுதியனுப்பும்படி கேட்டுக்கொள்ளுகிறோம்

Printed and published for the Proprietor by H. Nelliah B. A. [residing at 97 Mlaiban St. Colombo] at the "Ceylon Indian" Printing Works. 107B. Hulftsdorp Street, Colombo.